தமிழ்
மரபு
அறக்கட்டளை
பன்னாட்டு
அமைப்பு

தமிழ் மரபுத் திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

ஆகஸ்ட் – 2026

46

தமிழ் மரபு அறக்கட்டளை
பன்னாட்டு அமைப்பின்

தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ்

Tamil Marabu Thinai

தமிழ் மரபுத் திணை — 46

திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி

[ஆகஸ்ட் — 2026]

தமிழ் மரபுத் திணை

ஆசிரியர்:
முனைவர் க. சுபாஷிணி
பொறுப்பாசிரியர்:
மரிய ஜெரின்

Websites:
https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Facebook:
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ: Germany

Branches: India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

தமிழ் மரபு அறக்கட்டளை

ஆசிரியர் குழு :
1. முனைவர் க. சுபாஷிணி
2. முனைவர் தேமொழி
3. முனைவர் சிவ. இளங்கோ
4. முனைவர் கௌதம சன்னா
5. முனைவர் பக்தவத்சல பாரதி
6. முனைவர் கண்ணன் நாராயணன்

SILVER JUBILEE
தமிழ் மரபு அறக்கட்டளை
2001-2026

Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0)

~*~*~*~*~*~

குறிப்பு:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

அட்டைப் படம்: தனிநாயகம் அடிகளார்

இணையதள முகவரி: https://tamilheritage.org

தமிழ் மரபுத் திணை இதழுக்குத் **தங்களுடைய படைப்புகளை** அனுப்ப விரும்புபவர்கள் தங்களுடைய வரலாறு, மொழியியல், தமிழ் இலக்கியம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பொருண்மைகளில் அமைந்த படைப்புகளை
editorthfjournal@gmail.com
என்ற **மின்னஞ்சல் முகவரி**க்கு அனுப்பி வைக்கலாம்.

உள்ளடக்கம்

தலையங்கம்..8

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணியை நினைவுகூறுவோம்!...12

1. உலகெங்கும் உலாவும் தமிழ் மொழியின் தூதர் 18

2. அனைத்துலகத் தமிழியலாய்வின் தந்தை: தனிநாயகம்..23

3. பழமையான தமிழ் ஆவணங்களைப் பார்வையிடும் களப்பயணம்...29

4. தாய்லாந்தில் தமிழி எழுத்துப் பொறிப்புடன் தங்க மோதிரம்...39

5. திருவள்ளுவரும் பாண்டியன் அறிவுடை நம்பியும்...52

6. “அன்னையின் அமுத மொழிகள்” – நூல் அறிமுகம்..63

7. தமிழர் தலைவர் ஆசிரியருடன் காணொலிமூலம் ஓர் உரையாடல்.................................69

8. "மரபணுக்கள் எழுதும் மனித வரலாறு" –
புத்தக வெளியீடு..83

9. அறத்தின் ஆக்கம்!...87

10. ஆடிப்பிறப்பு ஏன் கொண்டாடப்படுகிறது?....90

11. குறிக்கோள் மோப்பக் குழைந்தது அனிச்சம்96

12. "சும்மா விட்ருமா சாமி"...99

13. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்..101

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்.101

உ. சுவலி — ஒலிநூல்கள்...103

ங. தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி
வெளியீடு...106

ச. தமிழ் மரபு அறக்கட்டளை புத்தக
வெளியீடு...108

ரு. வாருங்கள் படிப்போம் குழுவுடன்
"மலேசியா சிங்கப்பூரில் பெரியார்" புத்தக
திறனாய்வு..109

சூ. துயரச் செய்தி..110

தலையங்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.

ஆகஸ்ட் 2ஆம் தேதி உலகத் தமிழ்த்தூதர் டாக்டர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களது பிறந்தநாள்.

தமிழுக்கு மாபெரும் தொண்டாற்றிய பெருந்தகை. தமிழ் மொழியின் முதல் அச்சு நூலைத் தேடிக் கண்டுபிடித்து தமிழ் உலகுக்கு அளித்தவர். உலகத் தமிழ் அறிஞர்களை

ஒன்றிணைத்து, தமிழுக்கென உலக மாநாடுகள் நடைபெற வேண்டும் என்ற உயரிய இலக்கை முன்வைத்து, அதைச் செயலாக்கிய முன்னோடி.

இவரைச் சிறப்பிக்கும் வகையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் இந்த ஆண்டு ஆகஸ்ட் வரை தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, எமது வெள்ளி விழா ஆண்டின் சிறப்பு நிகழ்வாக, தனிநாயகம் அடிகளாரின் பல்வேறு பணிகளை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கில் கருத்தரங்கங்கள், கட்டுரைகள், நூல்கள் வெளியீடு, இணையவழி உரைகள் எனப் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது.

இதில் மிக முக்கியமான முயற்சியாக, தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது தமிழ்ப் பணிகளையும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு ஒரு ஆவணப்படத்தை உருவாக்கி வருகிறது. இந்த ஆவணப்படம் வருகின்ற 22.08.2026 அன்று நடைபெறும் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் வெளியிடப்பட உள்ளது என்ற

மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தனிநாயகம் அடிகளார் உலகின் பல நாடுகளுக்குச் சென்று தமிழின் தொன்மை, இலக்கிய வளம், பண்பாட்டு மேன்மை ஆகியவற்றை அறிஞர் உலகிற்கு எடுத்துரைத்தார். அவரது தளர்விலா முயற்சிகளால் பல வெளிநாட்டு ஆய்வாளர்கள் தமிழை ஆழமாகக் கற்று ஆய்வில் ஈடுபடத் தொடங்கினர். இன்று உலகளவில் தமிழ் ஆய்வுக்கென உருவாகியுள்ள பல கல்வி முயற்சிகளின் அடித்தளத்தில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

இன்றைய தலைமுறையினர் தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கையை அறிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகும். தனிப்பட்ட புகழை நாடாமல், தமிழின் புகழை உலக அரங்கில் உயர்த்துவதற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த அவரது பணிகள், இளைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அவரது வாழ்க்கை, தமிழ் மொழிக்காக அர்ப்பணிப்புடன்

செயல்பட விரும்பும் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காக அமைகிறது.

தனிநாயகம் அடிகளாரின் பிறந்த நாளை நினைவுகூரும் இந்த வேளையில், அவரது அரிய பணிகளைப் பரந்த மக்களிடம் கொண்டு சேர்ப்பதும், அவரது கனவுகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதும் நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும். அவரது தமிழ்த் தொண்டு உலகம் முழுவதும் தொடர்ந்து பேசப்படவும், ஆய்வு செய்யப்படவும், போற்றப்படவும் இணைந்து செயலாற்றுவோம்.

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியை தமிழ் உலகம் முழுமையாக அறிந்து கொள்ள, நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற பங்களிப்பை வழங்குவோம். அவரது நினைவும், தமிழுக்காக அவர் செய்த அரிய தொண்டும் தலைமுறைகள் தழுவி நிலைத்திருக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்!

அன்புடன்
முனைவர் க. சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணியை நினைவுகூறுவோம்!

— மரிய ஜெரின்

பழமையான தமிழ் ஆவணங்கள் (பழைய ஏடுகள், கையெழுத்துப் பிரதிகள், கல்வெட்டுகள், சாசனங்கள், இலக்கிய நூல்கள், வாய்மொழி மரபின் பதிவுகள் போன்றவை) ஒரு மொழியின் நினைவகம் மட்டுமல்ல; ஒரு சமூகத்தின் வரலாறு, சிந்தனை, வாழ்வியல், அறிவியல் அணுகுமுறை என பல பரிமாணங்களையும் தாங்கி நிற்கும் செல்வங்கள். இவ்வாவணங்கள் இல்லையெனில், நாம் கடந்த காலத்தை வெறும் கதைகளாக மட்டுமே பார்ப்போம்; ஆனால் ஆவணங்கள் மூலம் கடந்த காலம் “ஆதாரம்” கொண்ட ஆய்வாக மாறுகிறது. அதனால்தான் பழைய தமிழ் ஆவணங்களின் முக்கியத்துவம் மிக உயர்ந்தது

—மொழியின் வளர்ச்சி, பண்பாட்டின் தொடர்ச்சி, சமூக அமைப்புகள், அரசியல்–பொருளாதார மாற்றங்கள், தொழில்நுட்பம் மற்றும் கலை மரபுகள் அனைத்தையும் அவற்றின் வழியாக நுணுக்கமாக அறிய முடிகிறது.

மேலும், பழைய ஆவணங்கள் “எல்லோருக்கும் பயன்படும்” வகையில் மாற்றப்பட வேண்டுமென்பது மிக அவசியம். கையெழுத்துப் பிரதிகள் பெரும்பாலும் சிதைவடைந்திருக்கலாம், மொழி வடிவங்கள் காலப்போக்கில் மாற்றம் பெற்றிருக்கும், வாசிப்பு–பொருள் புரிதல் சிரமமாக இருக்கலாம். இதை சரிசெய்து தெளிவாகப் படிக்கச் செய்வதில் ஆராய்ச்சியும் ஆராய்ச்சியாளர்களின் பங்களிப்பும் தீர்மானமாகிறது. ஒரு ஆவணத்தை ஆராய்ச்சியாளர் படித்து, உரையைச் சீரமைத்து, பொருளை விளக்கி, பிற ஆதாரங்களுடன் ஒப்பிட்டு, அதன் வரலாற்று/இலக்கியப் பின்னணியை விளக்கி, அதனை பொதுமக்கள் புரிந்துகொள்ளும் முறையில் கொண்டு சேர்க்கும்போது தான் அந்த ஆவணம் சமூக பயன்பாட்டுக்கு வரும்.

இந்த செயல்பாட்டில் "ஆராய்ச்சி" என்பது வெறும் கல்விக்கான வேலை அல்ல; அது சமூகத்திற்கான அறிவுப் பாலமாக மாறுகிறது. ஆராய்ச்சியாளர்கள் செய்யும் பதிப்பித்தல் (edition), மொழியியல் ஆய்வு (linguistic study), வரலாற்று ஒப்பீடு (historical comparison), காலவரையறை (dating), கருத்தியல் விளக்கம் (interpretation) போன்ற பணிகள் மூலம் பழைய ஆவணங்கள் இன்றைய வாசகர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடியதாக மாறுகின்றன. இதன் பலன்கள் பல தளங்களில் தெரியும்:

- பள்ளி–கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் மரபின் ஆழமான புரிதல் கிடைக்கும்.
- கலாச்சார விழிப்புணர்வு அதிகரிக்கும்; அடையாளம் வலுப்பெறும்.
- வரலாற்று அறிஞர்களும் சமூக ஆய்வாளர்களும் ஆதாரங்களை நம்பிக்கையுடன் பயன்படுத்த முடியும்.
- தமிழ் மொழி ஆய்வு (Tamil studies) புதிய கேள்விகள், புதிய அணுகுமுறைகள், புதிய துறைகளாக விரியும்.

இப்படி பழைய தமிழ் ஆவணங்களை ஆராய்ச்சி மூலம் புதுப்பித்து பொதுமக்களுக்கு அணுகக்கூடியதாக மாற்றியவர்களில் தனிநாயகம் அடிகளாரின் பணி மிக முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தனிநாயகம் அடிகள் பல வகையில் தமிழ் ஆராய்ச்சிக்கான அடித்தளத்தை உறுதிப்படுத்தியதன் மூலம், பழைய நூல்களின் அர்த்தம், உரை தெளிவு, காலப் பின்னணி, மரபின் தொடர்ச்சி போன்றவற்றை தெளிவாக்கும் வழியை உருவாக்கினார், ஆய்வின் அடுத்த கட்டங்களுக்கு எடுத்துச் செல்லும் பாதை அவர் பங்களிப்பால் விரிந்தது.

அதனால் தான், தனிநாயகம் அடிகளாரின் வேலை தமிழ் ஆராய்ச்சியை “சிறிய வட்டத்திற்குள்” இருந்ததை விட “வளரும் துறையாக” மாற்றியதாகக் கருதப்படுகிறது. அவரது முயற்சிகள் மூலம் ஆராய்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரித்தன; புதிய தலைமுறை ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்யும் தைரியமும் திசையும் கிடைத்தது. பழைய ஆவணங்கள் வெறும் மரபுச் சேகரிப்பாக இல்லாமல், ஆழமான கல்வி ஆய்வாகவும் சமூக பயன்பாட்டாகவும் மாறத் தொடங்கின. இதன் விளைவாக தமிழ் ஆராய்ச்சியின் பரப்பளவு (*field*) விரிவடைந்து,

பல கிளைகள்—இலக்கியம், வரலாறு, மொழியியல், பண்பாடு ஆகியவற்றின் ஆய்வு—மேலும் செழுமை பெற முடிந்தது.

இவ்விதழின் அட்டைப்படம் அவரது பணியை சிறப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது, மேலும் இதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அடுத்த தலைமுறைக்கு அவரது பணியை எடுத்து சொல்லும் வகையில் அமைந்துள்ளது. தொடர்ந்து இவ்விதழ் தமிழ் மரபு அறக்கட்டளை உறுப்பினர்களால் எழுதப்பட்ட படைப்புகளைத் தாங்கியும் தமிழ் மரபு அறக்கட்டளையின் செயல்பாடுகள், காணொளிகள், நூல்கள், ஆகிய பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய வகையிலும் ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளது. அனைவரும் வாசித்து பயன்பெறுக! நன்றி!

அன்புடன்
மரிய ஜெரின்
பொறுப்பாசிரியர்
தமிழ் மரபுத் திணை இதழ்

தமிழ்த்தூது

1. உலகெங்கும் உலாவும் தமிழ் மொழியின் தூதர்

— முனைவர் நா. கண்ணன்

இலங்கையில் உள்ள காம்பொன் ஊரில் ஹென்றி ஸ்ரனிஸ்லால், சிசில் இராசம்மா வஸ்தியா பிள்ளை தம்பதிக்கு முதல் பிள்ளையாகப் பிறந்தார். கல்லூரிக்கல்வியை ஆங்கில வழியில் படித்து முடித்த இவரின் இயற்பெயர் ஸ்டானிஸ்லஸ் சேவியர் என்றாலும் பின்னர் தமிழ் மீது கொண்ட பற்றால் சேவியர் தனிநாயகம் என்று மாற்றிக்கொண்டார். இலங்கையில் இருந்த திருச்சபை அவரை இத்தாலி போய் படிக்க அனுமதிக்காமையால் மலங்காரச் திருச்சபையில் இணைந்து திருவனந்தபுர மறைமாவட்டத்தில் பாதிரியாராகப் பணியாற்றினார். அங்கே இருந்தபடி The Carthaginian Clergy என்கிற தலைப்பில் இறையியலில் முனைவர் பட்டம் பெற்றார்.

வடக்கன்குளத்தில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவர் குருசாமி என்பவரிடம் தமிழ் பயின்றார். அவருக்கு லத்தீன், ஸ்பானிஷ்,

பிரெஞ்சு, ஜெர்மன், போர்த்துகீஸ் முதலிய பல்வேறு மொழிகளில் தனித்த புலமை இருந்தது. ஆனாலும், தன்னுடைய அன்னைத்தமிழின் இலக்கியங்களில் தேர்ச்சி பெறவேண்டும் என்கிற எண்ணம் அவரை செலுத்தியது. அண்ணாமலைப் பல்கலையில் அவர் முதுகலை படிப்பில் இளங்கலையைப் பயிலாமலே இணைய, அண்ணாமலை செட்டியார் அனுமதி கொடுத்தார். முப்பத்து இரண்டு வயதில் தமிழ் மொழியை முறையாக அவர் பயின்று இன்பமுற்றார். எம்.லிட் பட்டத்திற்காக சங்க இலக்கியத்தில் இயற்கை என்கிற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார். ரிக் வேதப்பாடல்களைப் படித்துவிட்டு, "இந்தப்பாடல்களை விடச் சங்க இலக்கியப் பாடல்கள் பல மடங்கு அற்புதமானவை!" என்று மெய்சிலிர்த்துச் சொன்னார்.

1948 ஆம் ஆண்டு தமிழ் இலக்கியக் கழகத்தை தூத்துக்குடியில் நிறுவி பல்வேறு தமிழ் நூல்களைப் பதிப்பித்தார். அங்கே "Tamil Culture" என்ற ஆங்கிலக் காலாண்டிதழை வெளியிட்டார். தமிழின் பெருமையை உலகறிய செய்ய எண்ணிய அவர் பிற மொழிகளில் தமிழ் பற்றி வந்திருக்கும் குறிப்புகளை 'Reference Guide to

Tamil Studies" என்ற நூறுக்குச் சற்றே கூடுதலான குறிப்புதவி நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பத்து ஐந்து பிற மொழி நூல்களில் வழங்கி வரும் குறிப்புகளைப் பதிவு செய்தார்.

ஒன்பது வருடங்கள் இலங்கையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் லண்டன் பல்கலையில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல் என்கிற தலைப்பில் ஆய்வு செய்து இரண்டாம் முறையாக முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் மலேசியாவில் உள்ள பல்கலையில் இந்தியத்துறையில் தலைவராக இணைந்து தமிழ் பேராசிரியாகப் பணியாற்றினார். அப்பொழுது தான் உலகம் முழுக்க இருக்கும் தமிழறிஞர்களை இணைத்து உலகத்தமிழ் மாநாடு நடத்த வேண்டும் என்று முனைந்தார். தமிழக அரசின் உதவியைக் கோரினார். அப்பொழுதைய பக்தவச்சலம் அரசு பெரிய ஈடுபாடு காட்டாமையால் உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை (*International Association for Tamil Research, IATR*) பல்வேறு தமிழறிஞர்களோடு இணைந்து நிறுவினார்.

முதல் உலகத்தமிழ் மாநாட்டை கோலாலம்பூரில் மலேசிய அரசின் உதவியோடு வெற்றிகரமாக

அடிகள் நடத்தினார். அந்த அமைப்பே எட்டு உலகத்தமிழ் மாநாடுகளை நடத்தியது. அதிலும் நான்கு உலகத்தமிழ் மாநாடுகள் அடிகளார் வாழ்நாள் காலத்திலேயே நடந்தது. "இலத்தீன் சட்டத்தின் மொழியென்றால், பிரெஞ்சை ராஜதந்திரத்தின் மொழி என்போம் என்றால், ஜெர்மன் அறிவியலின் மொழி மற்றும் ஆங்கிலம் வாணிகத்தின் மொழி என்றால் தமிழ் பக்தியின் மொழி!" என்று முழங்கிய அடிகளார், தமிழின் பண்டைய இலக்கியங்கள் எப்படி வடமொழி இலக்கியங்களைப் போல அல்லாமல் சமயச்சார்பற்று விளங்கின என்பதை நிறுவினார்.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செறிவையும் ஜப்பான், சிலி, பிரேசில் ,அமெரிக்கா முதலிய நாடுகளில் இருநூறு சொற்பொழிவுகள் மற்றும் பாடம் எடுத்தல் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தினார். தாய்லாந்தில் தங்கியிருந்த பொழுது அங்கே மன்னரின் முடிசூட்டு விழாவின் பொழுது பாடப்படுவது திருவெம்பாவை பாடல் என்பதைக் கண்டறிந்து உலகுக்குச் சொன்னார். ஆசிய மொழிகளிலேயே முதலில் அச்சடிக்கப்பட்ட நூல் வெளியான மொழி தமிழ் என்பதை கார்த்திலியா (1556), தம்பிரான் வணக்கம் (1578), கிறிஸ்தியானி வணக்கம் (1579)

முதலிய அரிய அச்சு நூல்களின் மூலப்பிரதிகளைத் தேடிக்கண்டெடுத்துப் பதிப்பித்து நிரூபித்தார்.

தமிழின் ஆய்வுமுறையில் வரலாறு, பண்பாடு, ஒப்பிலக்கியம், மொழியியல் ஆகியவற்றை இணைத்து ஆய்வு செய்யும் போக்கை ஏற்படுத்தியதில் அவர் முன்னோடியாக இருந்தார். தன்னுடைய இறுதிக்காலத்தில் ஈழத்தந்தை செல்வா நினைவுப் பேருரை நிகழ்த்தினார். அதில் "தமிழ் மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாகத் தழுவிய சமயங்கள் பல. ஆயினும் எச்சமயத்தைச் சார்ந்தாலும் தாம் தமிழ் மக்கள் என்று தமிழர் பண்பாட்டையும் கொள்கைகளையும் அவர்கள் கடைப்பிடித்தே வந்தனர், இன்றும் கடைப்பிடித்தே வருகின்றனர்" என்று பெருமை பொங்கச் சொன்னார்.

'உலகெங்கும் உலாவும் தமிழ் மொழியின் தூதர்' என்று அறியப்பட்ட தனிநாயகம் அடிகளை நினைவில் நிறுத்துவோம்.

2. அனைத்துலகத் தமிழியலாய்வின் தந்தை: தனிநாயகம்

— முனைவர் தேமொழி

சேவியர் தனிநாயகம் அடிகள் (ஆகஸ்ட் 2, 1913 – செப்டம்பர் 1, 1980) "தமிழ்த்தூது" என்று அன்புடன் அழைக்கப்படுகிறார். இலங்கைத் தமிழரான தனிநாயகம் அடிகள், உலகளாவிய பயணங்களை மேற்கொண்டு அந்நாடுகளில் கிடைக்கப் பெற்ற தமிழின் வளங்களைத் தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்தியவர். இவர் தமிழ், ஆங்கிலம், ஹீப்புரு, லத்தின், இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஸ், ஜெர்மன், கிரேக்கம், மலாய், சமஸ்கிருதம், போர்ச்சுக்கீஸ், ருஷ்யன், சிங்களம் ஆகிய 14 மொழிகளை அறிந்த பன்மொழி அறிஞராக விளங்கியமை அவருக்குப் பிறமொழியினரிடத்தில் தமிழின் பெருமையை அறிமுகப்படுத்துவதற்கு உதவியது.

தமிழாய்வில் பேரார்வம் கொண்ட தனிநாயகம் அடிகள்; உலகத்தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை (International Association for Tamil Research,

IATR) நிறுவியவர், உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளைத் தோற்றுவித்தவர், 1964 ஆம் ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலியவர், தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) காலாண்டிதழ் வெளியிட்டவர் என்ற நிலையில் தமிழ் வளர்ச்சிப் பாதை பங்கேற்பினாலும், தொடர்ந்த தமிழாய்வினாலும் தமிழ் ஆய்வின் முன்னோடிகளில் ஒருவராக அறியப்படுபவர்.

அறுபத்தேழு அகவையில் அவர் மறைவதற்கு முன்னர் தனிநாயகம் அடிகளார் தானே முன்னின்று பங்கேற்று 4 தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தினார்;
முதலாவது மாநாடு மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரிலும் (ஏப்ரல் 16 – 23, 1966);
இரண்டாவது மாநாடு தமிழகத்தின் தலைநகர் சென்னையிலும் (ஜனவரி 3–10, 1968);
மூன்றாவது மாநாடு பிரெஞ்சு நாட்டின் தலைநகர் பாரீசிலும் (ஜனவரி 15–18, 1970);
நான்காவது மாநாடு இலங்கையின் யாழ்ப்பாணத்திலும் (ஜனவரி 3–9, 1974) ஆகிய தமிழாராய்ச்சி மாநாடுகளில் இவர் பங்களிப்பு மேன்மையானது.

நான்காம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஆரம்ப உரையாக தமிழாராய்ச்சி மாநாடுகள் எதற்காக என்பதை வலியுறுத்த தனிநாயகம் அடிகளார் பின்வருமாறு உரையாற்றினார்.

"வெறும் புகழிற்காகவோ, காரணமின்றிப் போற்றுவதற்கோ நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை. ஆராய்ச்சியாளனின் நோக்கம் உண்மையைக் கண்டு பிடிப்பது, உண்மையைப் புலப்படுத்துவது, மறைந்திருக்கும் உண்மைகளை அகழ்ந்தெடுப்பது.

மொழிகள் எத்துணையிருக்கத் தமிழிற்கு மட்டும் இம்மாநாடுகளை நடத்தவும், உலகத்து அறிஞர்கள் வரவும் காரணங்கள் இருக்க வேண்டும்.

"இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு திராவிடப்பண்பாடு" என்று சுநிதிகுமார் சட்டர் கூறியிருக்கின்றார். இந்த உண்மையைத் தமிழ்த் துறைகளில் ஆராய்ச்சி நடத்துவோர் உணர்ந்து கொண்டே வருகின்றனர்.

சிந்துவெளி நாகரீகம் திராவிட நாகரீகம் என்று எண்ணுகின்றவர்களுக்கு தமிழ் மக்களின்

தொன்மையும் தமிழ்க்கலைகளின் தொன்மையும் நன்கு புலனாகும்.

மொழி அமைப்பிலும் வளத்திலும் தமிழ்மொழி உலக மொழிகளிற் சிறந்தது. தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ், மண்டிக்கிடக்கும் பண்பாடு இவற்றையெல்லாம் ஆராய்கின்றவர்கள் மேலும் மேலும் அவற்றை ஆராய விரும்புவர். ஆதலாலேதான் தமிழாராய்ச்சி வளர்ந்து கொண்டு வருகின்றது."

தனிநாயக அடிகளாரின் இறுதியாகப் பங்கேற்ற நான்காம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினரால்;
"உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகள் மூன்றாண்டுகளுக்கொருமுறை தொய்வில்லாமல் அடிகளார் ஆரம்பித்து வைத்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்துவதே அடிகளாருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும் – காணிக்கையாகும்."
என்ற வேண்டுகோள் அம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டது.

தமிழாய்வில் தமிழ்ப் பண்பாட்டு பரப்பலில் தனிநாயக அடிகள் கொண்டிருந்த அக்கறையை;

"கண்கள் பஞ்சடைந்து போகின்றது கால்கள் நடக்க மறுக்கின்றன. ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது" என்று வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் தனிநாயக அடிகள் குறிப்பிட்டதன் மூலம் அறிய முடிகிறது.

The woods are lovely, dark and deep,
But I have promises to keep,
And miles to go before I sleep,
And miles to go before I sleep.
என்று அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃப்ரோஸ்ட் கடமை பற்றிக் கூறிய கவிதை வரிகளை நினைவு படுத்துகிறது.

தமிழாய்வின் வழிகாட்டியாக தனிநாயக அடிகள்:
தனிநாயக அடிகளின் ஆய்வுக் கொள்கைகளைத் தொடரும் நோக்கத்தில், அவருடைய மறைவிற்குப் பிறகு முதன்முதலில் "தனிநாயக ஆய்வகம்" என்ற அமைப்பு 19—02—84 இல் மலேசியாவில், ஈப்போவில் தோற்றுவிக்கப்பட்டது (எண் 02 சே, மொடான் கிட், ஈப்போ, மலேசியா). அதன் பின்னர் அதன் கிளைகள் உலகின் பல நாடுகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வகத்தின் விருதுவாக்காக, தனிநாயக அடிகள் விரும்பிப் போற்றிய திருமூலரின்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்ற வாக்கு அமைகிறது.

தனிநாயக ஆய்வகத்தின் நோக்கமாகத் தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புகளை இக்காலத்திற்கு ஏற்றவையாகச் செய்தல் என்ற குறிக்கோள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ் ஆய்வுகளின் கருப்பொருள்களாக 1. தமிழ் இலக்கியம், 2. தமிழ்ப் பண்பாடு, 3. தமிழ் மக்களின் வரலாறு, 4. மானிட இயல், 5. தமிழ் மக்களின் வாழ்க்கைத் தத்துவம், 6. சமயம், 7. வழிபாட்டு முறைகள், 8. பழக்க வழக்கங்கள், 9. திருவிழாக்கள், 10. உணவு வகைகள், 11. பொழுது போக்குகள், 12. விளையாட்டுகள் ஆகியனவற்றை தனிநாயக அடிகளின் வழியில் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன.

தகவல் உதவி: தவத்திரு தனிநாயகம் அடிகளார், மாட்சி நயப்பு மலர், 18—09—1993

3. பழமையான தமிழ் ஆவணங்களைப் பார்வையிடும் களப்பயணம்

— முனைவர் க. சுபாஷிணி

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு ஐரோப்பியக் கிளை ஏற்பாட்டில் ஜூலை 25, 2026 அன்று ஏற்பாடு செய்யப்பட்டு, கிழக்கு ஜெர்மனி பிராங்க கல்விக்கூடத்தில் 300 ஆண்டுகள் பழமையான தமிழ் ஆவணங்களைப் பார்வையிட மேற்கொண்ட களப்பயணம் இனிதாக நிறைவேறியது.

ஜெர்மனியின் ஹாலே (Halle an der Saale) நகரில் அமைந்துள்ள பிராங்கே கல்வி நிறுவனம் (Franckesche Stiftungen) 1698 ஆம் ஆண்டு ஜெர்மானிய இறையியலாளரும் கல்விச் சீர்திருத்தவாதியுமான ஆகஸ்ட் ஹெர்மன் பிராங்கே (August Hermann Francke, 1663–1727) அவர்களால் நிறுவப்பட்டது. கல்வி, சமூகநலம், அறிவியல், ஆன்மிகம், மனிதநேயச் சேவை ஆகியவற்றை ஒருங்கிணைத்து சமுதாய முன்னேற்றத்தை உருவாக்குவதே இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கமாக இருந்தது. ஐரோப்பாவின் மிக முக்கியமான கல்வி, ஆராய்ச்சி மையங்களில் ஒன்றாக வளர்ந்த இந்நிறுவனம், உலகின் பல பகுதிகளுடன் அறிவு, பண்பாட்டுத் தொடர்புகளை உருவாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க அமைப்பாக விளங்குகிறது.

1705 ஆம் ஆண்டு டென்மார்க் மன்னர் நான்காம் பிரெடெரிக் (King Frederick IV of Denmark), இந்தியாவில் இருந்த தனது டேனிஷ் குடியேற்றமான தரங்கம்பாடியில் (Tranquebar) கிறிஸ்தவப் பணியை முன்னெடுக்க முடிவு செய்தார். அதற்காக ஹாலே பிராங்கே கல்வி நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில்

பார்தலோமியுஸ் சீகன்பால்க் (Bartholomäus Ziegenbalg), ஹெய்ன்ரிக் ப்ளூட்சாவ் (Heinrich Plütschau) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் 1706 ஆம் ஆண்டு தரங்கம்பாடியை அடைந்து, இந்தியாவில் முதல் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட புராட்டஸ்டண்ட் மறைப்பணியைத் தொடங்கினர். சீகன்பால்க் தமிழ்மொழியைக் கற்று, தமிழில் நூல்களை வெளியிட்டதுடன், பைபிளின் புதிய ஏற்பாட்டைத் தமிழில் மொழிபெயர்த்து, அச்சுத்தொழில், கல்வி வளர்ச்சி ஆகியவற்றுக்கும் பெரும் ஊக்கமளித்தார். இச்செய்திகள் எனது ”ஜெர்மானியத் தமிழியல்”(காலச்சுவடு பதிப்பகம், 2018) என்ற நூலில் விரிவாக இடம்பெற்றுள்ளன.



பிராங்கே கல்வி நிறுவனத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான உறவு

புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவப் பணியை மட்டுமே சார்ந்ததல்ல. கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இந்நிறுவனம் தமிழ் மொழி, இலக்கியம், கல்வி, சமூக வரலாறு, பண்பாட்டு ஆய்வு ஆகிய துறைகளுடன் ஆழமான தொடர்பைப் பேணிவருகிறது. தரங்கம்பாடி வழியாக உருவான இத்தொடர்பு, தமிழ் ஓலைச்சுவடிகள், பழைய அச்சு நூல்கள், கடிதங்கள், அகராதிகள், இலக்கண நூல்கள், சமூக வரலாற்று ஆவணங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து ஆய்வு செய்வதற்கும் வழிவகுத்தது. இதன் மூலம் தமிழ்மொழி, தமிழரின் சமூக வரலாறு, கல்வி, இலக்கிய வளர்ச்சி ஆகியவை தொடர்பான உலகளாவிய ஆராய்ச்சிகளுக்கு பிராங்கே அறக்கட்டளை இன்றளவும் அரிய ஆதாரங்களையும் குறிப்பிடத்தக்க அறிவியல் பங்களிப்புகளையும் வழங்கி வருகிறது.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பும், ஜெர்மனியின் ஹாலே நகரில் அமைந்துள்ள பிராங்கே கல்வி நிறுவனமும் கடந்த சில ஆண்டுகளாக ஆராய்ச்சி, ஆவணப் பாதுகாப்பு, பண்பாட்டு வரலாற்றுத் துறைகளில் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகின்றன. இவ்விரு நிறுவனங்களின் இணைந்த செயல்பாடுகள், தமிழரின் வரலாறு, மொழி, இலக்கியம், ஐரோப்பாவுடனான வரலாற்றுத் தொடர்புகள் குறித்த ஆய்வுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, ஜெர்மனியில் வாழும் தமிழர்களைப் பிராங்கே கல்வி நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று, தமிழ்நாட்டுக்கும் ஹாலேவுக்கும் இடையே கடந்த

நானூறு ஆண்டுகளாகத் தொடரும் வரலாற்றுத் தொடர்பை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஏற்பாடு செய்து வருகிறது. அங்குப் பாதுகாக்கப்பட்டுள்ள பாதிரிமார்களின் கையெழுத்திலான தமிழ் ஓலைச்சுவடிகள், கையெழுத்து ஆவணங்கள், பழைய அச்சு நூல்கள், கடிதங்கள், அவற்றின் வரலாற்றுப் பின்னணி, அவற்றை மையமாகக் கொண்டு தற்போது நடைபெற்று வரும் ஆய்வுப் பணிகள் ஆகியவை பங்கேற்பாளர்களுக்கு விரிவாக விளக்கப்படுகின்றன.

நேற்று நடைபெற்ற நிகழ்வில், எர்லாங்கன் தமிழ்ச் சங்க அமைப்பைச் சேர்ந்த 40 பேர் பிராங்கே கல்வி நிறுவனத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆவணக் காப்பகத்தையும், நானூறு ஆண்டுகளாகத் தொடரும் தமிழ்—ஜெர்மன் அறிவியல், பண்பாட்டுத் தொடர்புகளையும்

நேரில் அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெரியோரும் சிறார்களும் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று, பல்வேறு கேள்விகளை எழுப்பி, பிராங்கே அறக்கட்டளையின் வரலாறு, அதன் ஆய்வுப் பணிகள், தமிழுடன் கொண்டிருக்கும் ஆழமான தொடர்பு ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்துகொண்டனர். இத்தகைய நிகழ்வுகள் தமிழரின் உலகளாவிய பாரம்பரியத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் முக்கியமான அறிவியல், பண்பாட்டுப் பாலமாக அமைகின்றன.

இந்த நிகழ்வில் என்னுடன் இதன் ஏற்பாட்டில் இணைந்த ஜோசபின் ரம்யா, சுரேஷ் இருவருக்கும் மற்றும் எர்லாங்கன் தமிழ்ச்சங்க ஜெய்வேல் அவர்களுக்கும் பாராட்டுகள். இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துச் செயல்படுவதில் ஒத்துழைப்பு நல்கிய பிராங்கே கல்வி நிறுவனத்தின் ஃப்ரீடா லிப்போல்ட் அவர்களுக்கு நன்றி.

—சுபா
26/7/2026

———



கடந்த சனிக்கிழமை தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு (எர்லாங்கன் தமிழ் சங்கத்துடன் இணைந்து) ஏற்பாடு செய்திருந்த ஜெர்மனியில் இருந்து தமிழ்நாட்டிற்கு 18 ஆம் நூற்றாண்டில் வந்த பாதிரிமார்களின் அச்சுக்கலை பற்றிய பட்டறையில் குழந்தைகளுக்கான அச்சுக்கலை பயிற்சி வழங்கப்பட்டது.

அந்தப் பயிற்சியின் போது குழந்தைகள் உருவாக்கிய அச்சு ஓவியங்கள் பிராங்க கல்விக்கூடத்தில் பட்டறை வகுப்பறையில் தற்சமயம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

—சுபா
28/7/2026

4. தாய்லாந்தில் தமிழி எழுத்துப் பொறிப்புடன் தங்க மோதிரம்

— ரஞ்சித் குமார்

தாய்லாந்தில் புதிதாகக் கண்டறியப்பட்ட தங்க மோதிரம்: தென்கிழக்காசியாவில் தமிழர்களின் 2,000 ஆண்டுகால வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமா?

தாய்லாந்தில் தமிழி எழுத்துப் பொறிப்பு கண்டுபிடிக்கப்பட முடியுமா?

முதல் பார்வையில் இந்தக் கேள்வி வியப்பாகத் தோன்றலாம். ஆனால் கடந்த பல தசாப்தங்களாக தாய்லாந்து மற்றும் தென்கிழக்காசியா முழுவதும் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகள் வழங்கியுள்ள சான்றுகள், அது ஆச்சரியப்பட வேண்டிய ஒன்று அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

அண்மையில் தாய்லாந்தின் பெட்சபுரி (Phetchaburi) பகுதியில் நடைபெற்ற தொல்லியல் அகழாய்வில் பொறிப்புடன் கூடிய ஒரு தங்க மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தப் பொறிப்பைத் தொல்லியலாளர்களும் கல்வெட்டியல் அறிஞர்களும் தொடர்ந்து ஆய்வு

செய்து வரும் நிலையில், ஒரு விரிவான வரலாற்றுக் கேள்வி எழுகிறது:

தாய்லாந்தில் தமிழி எழுத்துப் பொறிப்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டால், அது உண்மையில் எதிர்பாராத ஒன்றாக இருக்குமா?

தொல்லியல், கல்வெட்டியல் மற்றும் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் அதன் பதில் இல்லை என்பதே ஆகும்.

தமிழகத்திற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையிலான கடல் வணிகம் பேரரசு சோழர்களின் காலத்தில் தொடங்கியதல்ல. அது சங்ககாலத்திலேயே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கியது. பருவமழைக் காற்றின் இயல்பை நன்கு அறிந்திருந்த தமிழ் வணிகர்கள், வங்காள விரிகுடாவைக் கடந்து விரிந்த கடல் வணிகப் பாதைகளை உருவாக்கியிருந்தனர். வங்காள விரிகுடா ஒரு தடையாக இல்லாமல், உலகின் மிகப் பழமையான கடல்வழி வணிக நெடுஞ்சாலைகளில் ஒன்றாக இருந்து, தமிழகத்தின் துறைமுகங்களை இன்றைய இலங்கை, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, கம்போடியா, வியட்நாம் மற்றும் தென் சீனாவுடன் இணைத்தது.

காவ் சாம் கயோ (Khao Sam Kaeo), பூ காவ் தோங் (Phu Khao Thong), க்ளோங் தோம் (Khlong Thom) மற்றும் குவான் லுக் பாட் (Khuan Luk Pat) போன்ற முக்கிய தொல்லியல் தளங்களில் நடைபெற்ற அகழாய்வுகள், இந்தப் பழமையான தொடர்புகளுக்கான உறுதியான ஆதாரங்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளில் ஒன்று,

தெற்கு தாய்லாந்தின் க்ளோங் தோம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தங்கத் உரைக்கல் (*goldsmith's touchstone*) ஆகும். அதில் தமிழி எழுத்தில் 'பெரும் ப(த்)தன் கல்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இது கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்தியத் துணைக்கண்டத்திற்கு வெளியே இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான தமிழ் எழுத்துப் பொறிப்புகளில் இதுவும் ஒன்றாகும். இதன் மூலம், தமிழி எழுத்தை அறிந்தவர்கள்—பெரும்பாலும் தமிழ் வணிகர்களோ அல்லது பொற்கொல்லர்களோ—2,200 ஆண்டுகளுக்கு முன்பே இந்தப் பகுதியில் செயல்பட்டிருந்தனர் என்பது உறுதியாகிறது.

இதனுடன் தொல்லியல் சான்றுகள் மேலும் வலுப்பெறுகின்றன.

குவான் லுக் பாட் பகுதியில் நடைபெற்ற அகழாய்வில் சங்ககாலச் சோழர் செப்புக்காசும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது இப்பகுதியில் தமிழர்களின் தொன்மையான கடல் வணிகச் செயல்பாடுகளை உறுதிப்படுத்தும் அபூர்வமான கண்டுபிடிப்பாகும். அந்த நாணயத்தின் ஒரு பக்கத்தில் சோழர்களின் புலிச் சின்னமும்,

மறுபக்கத்தில் யானை உருவமும், ஆரம்பகாலச் சோழர் நாணயங்களுக்கு உரிய பிற சின்னங்களும் இடம்பெற்றுள்ளன. தெற்கு தாய்லாந்தில் இந்த நாணயம் கிடைத்திருப்பது, இடைக்காலச் சோழப் பேரரசு உருவாகும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, ஆரம்பகாலச் சோழர்களுடன் தொடர்புடைய தமிழ் வணிகர்களும், பொருட்களும், அரசியல் அடையாளங்களும் தாய்—மலாய் தீபகற்பத்தை அடைந்திருந்தன என்பதற்கான நேரடி சான்றாகும்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டிற்குள், புகழ்பெற்ற தகுவாப்பா (Takuapa) தமிழ் கல்வெட்டு, மணிகிராமம் வணிகக் குழுவின் செயல்பாடுகளைப் பதிவு செய்கிறது. இது தாய்லாந்துத் தீபகற்பத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ் வணிகச் சமூகம் இருந்ததை உறுதிப்படுத்துகிறது. தென்கிழக்காசியா முழுவதும் கிடைத்துள்ள பல கல்வெட்டுகள் தமிழ் வணிகர்கள், கைவினைஞர்கள், கோயில் கட்டிடக் கலைஞர்கள் மற்றும் வணிகக் குழுக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவை அனைத்தும் தமிழர்களின் வணிக வலையமைப்பு

எவ்வளவு பரந்திருந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழகத்திற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையிலான உறவு வணிகத்தை மட்டும் சார்ந்ததல்ல. பல்லவ எழுத்துமுறை, தென்கிழக்காசியாவின் பல ஆரம்பகால எழுத்துமுறைகளுக்கு அடித்தளமாக அமைந்தது. அதேபோல், தமிழ் சைவ சமயத்தின் முதன்மையான நாயன்மார்களில் ஒருவரான காரைக்கால் அம்மையாரின் வழிபாடு கம்போடியா, தாய்லாந்து மற்றும் ஜாவா வரை பரவியது. அங்கு அவரது தனித்துவமான உருவக்கலை இன்றும் கோயில் சிற்பங்களில் காணப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்புகள் அனைத்தும், தமிழகத்திற்கும் தென்கிழக்காசிய அரசுகளுக்கும் இடையே பல நூற்றாண்டுகளாக நிலவிய கடல்வழி பரிமாற்றம், பண்பாட்டு தொடர்பு, சமயப் பரவல் மற்றும் கலை ஒத்துழைப்பின் சான்றுகளாக விளங்குகின்றன.

இவ்வளவு வலுவான வரலாற்றுப் பின்னணியில்தான் பெட்சபுரியில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தங்க மோதிரத்தை நாம் ஆராய வேண்டும். அதன் பொறிப்பு

உண்மையிலேயே தமிழி எழுத்தில் எழுதப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அது தனித்து நிற்கும் ஒரு விதிவிலக்கான கண்டுபிடிப்பாக இருக்காது. மாறாக, தென்கிழக்காசியாவில் தமிழர்களின் நீண்டகால இருப்பை உறுதிப்படுத்தும் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் ஆதாரங்களின் வரிசையில் மேலும் ஒரு முக்கியமான சான்றாக இணையும்.

பெட்சபுரி தங்க மோதிரம் — ஒரு புதிய ஆய்வு பெரிய வரலாற்றுப் பின்னணியைப் பார்த்த பிறகு, இப்போது அந்தப் பொறிப்பையே ஆராயலாம்.

பெட்சபுரி தங்க மோதிரம், சாதாரண ஆபரண மோதிரமாக அல்லாமல், முத்திரை மோதிரமாக

(Seal Ring) உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. பண்டைய முத்திரை மோதிரங்களின் முக்கிய அம்சங்களில் ஒன்று, அவற்றில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் பெரும்பாலும் கண்ணாடிப் பிரதிபலிப்பு (mirror image) வடிவில் செதுக்கப்பட்டிருப்பதாகும். இதன் காரணம், மெழுகு அல்லது களிமண் போன்ற மென்மையான பொருள்களில் முத்திரையிடும்போது, அதன் பதிப்பு சரியான திசையில் தோன்ற வேண்டும் என்பதற்காக. தமிழகத்தில் இது போன்று பல முத்திரை மோதிரங்கள் கிடைத்துள்ளது.

இந்த முக்கிய அம்சம், ஆரம்பகால வாசிப்பில் முழுமையாகக் கருத்தில் கொள்ளப்படவில்லை என்று தோன்றுகிறது.

வெளியிடப்பட்ட புகைப்படங்களை ஆய்வு செய்தபோது, மோதிரத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் தலைகீழாக அல்ல, மாறாக பிரதிபலிப்பு வடிவில் இருப்பதை நான் கவனித்தேன். இது முத்திரை மோதிரங்களுக்குரிய வழக்கமான அமைப்புடன் முழுமையாகப் பொருந்துகிறது. அந்த எழுத்துகளை கண்ணாடிப் பிரதிபலிப்பாகப்

பார்த்தபோது, அவை முற்றிலும் வேறுபட்ட எழுத்துவரிசையாகத் தோன்றின.

எனது கல்வெட்டியல் ஆய்வின் அடிப்படையில், இந்தப் பொறிப்பு தமிழி எழுத்தில் எழுதப்பட்டதாக நான் கருதுகிறேன். அதை "அளர் வைரதன்" (Aḷar Vairatan) என்று வாசிக்கலாம் என முன்மொழிகிறேன். இந்த வாசிப்பு, ஒவ்வொரு எழுத்தின் வடிவவியல் (morphology), அவற்றின் திசையமைப்பு மற்றும் அறியப்பட்ட தமிழி எழுத்துருக்களுடனான ஒப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறது. ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டு, ஆரம்பகால தமிழி கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துருக்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

இங்கு முன்வைக்கப்படும் இந்த வாசிப்பு, இறுதியான முடிவாக அல்ல; மாறாக, தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய கல்வெட்டியல் அறிஞர்களிடையே மேலதிக ஆய்வையும் அறிவியல் விவாதத்தையும் ஊக்குவிக்கும் நோக்கில் முன்வைக்கப்படும் ஒரு ஆய்வுக் கருத்தாகும். புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் எந்தக் கல்வெட்டையும் போலவே, அசல்

பொருளை நேரில் ஆய்வு செய்வதும், உயர் தீர்மான (high–resolution) படங்கள் மூலம் ஒப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்வதும், விரிவான பண்டைய எழுத்தியல் (paleography) பகுப்பாய்வும் இந்த வாசிப்பை மதிப்பிடுவதற்கு இன்றியமையாதவை.

ஒரே ஒரு கண்டுபிடிப்பு வரலாற்றை மாற்றிவிடாது. ஆனால் ஒவ்வொரு புதிய சான்றும், மிகப் பெரிய வரலாற்றுப் புதிரின் சரியான இடத்தில் பொருந்தும்போது, நமது புரிதல் முன்னேறுகிறது. பெட்சபுரி தங்க மோதிரம், ஆசிய வரலாற்றின் மிகவும் சுவாரஸ்யமான அத்தியாயங்களில் ஒன்றான—இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த தமிழகத்திற்கும் தென்கிழக்காசியாவிற்கும் இடையிலான கடல்வழித் தொடர்புகள்—மீது மீண்டும் கவனத்தை ஈர்த்துள்ளது.

விரைவில் வெளியாகவுள்ள எனது அடுத்த ஆய்வுக் கட்டுரையில், இந்த மோதிரத்தில் பொறிக்கப்பட்டுள்ள தமிழி எழுத்தின் விரிவான எழுத்தியல் ஆய்வை வழங்கவுள்ளேன். அதில் ஒவ்வொரு எழுத்தின் வடிவம், திசையமைப்பு

மற்றும் ஏன் இந்த வாசிப்பு புதிய கோணத்தில் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன் என்பதையும் விளக்குவேன். இது தவிர இதுவரை இந்த எழுத்துகளுக்கு இரண்டு வேறுபட்ட வாசிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று அவை பிராகிருத மொழியைச் சேர்ந்தவை என்று கருதுகிறது; மற்றொன்று அவற்றை பழைய கெமெர் எழுத்தாக அடையாளம் காட்டுகிறது. எனது ஆய்வின் அடிப்படையில், அவை தமிழி எழுத்தில் "அளர் வைரதன்" என்று வாசிக்கப்படலாம் என நான் முன்மொழிகிறேன்.

'வைரதன்' என்பது ஒரு தனிப்பெயராகத் தோன்றுகிறது. 'அளர்' என்ற சொல் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது; 'அளர்' என்பது நஞ்சை நிலத்தை குறிக்கும் சொல். இருப்பினும், கல்வெட்டுகளில் இத்தகைய சொற்கள் பல நேரங்களில் தனிப்பெயர்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, தற்போதைய நிலையில் "அளர் வைரதன்" என்பதை
"நஞ்சை நிலத்தை சேர்ந்த வைரதன்" என்று பொருள் கொள்ளலாம்.

மேலும், இந்த அசல் மோதிரத்தை நேரில் ஆய்வு செய்யும் வாய்ப்பையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏனெனில், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எந்தப் பொருளைப் பற்றியும் உறுதியான முடிவை எட்ட, அதன் அசல் வடிவை நேரடியாக ஆய்வு செய்வது இன்றியமையாததாகும். இந்த ஆய்வு வரலாற்றாளர்கள், தொல்லியலாளர்கள் மற்றும் எழுத்தியல் அறிஞர்களிடையே ஆக்கப்பூர்வமான அறிவியல் விவாதங்களை ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன். கடந்த காலத்தைப் பற்றிய நமது புரிதல், கடுமையான அறிவியல் ஆய்வுகளும் திறந்த கல்வியியல் கலந்துரையாடல்களும் மூலமே தொடர்ந்து முன்னேறுகிறது.

நன்றி: *CHAAR (Centre for History and Archaeological Research)*

5. திருவள்ளுவரும் பாண்டியன் அறிவுடை நம்பியும்

— அருள் மெர்வின்

பொய் சொல்லக்கூடாது, கள் குடிக்கக்கூடாது என்றெல்லாம் திருவள்ளுவர் நீதி போதித்திருப்பதின் அவசியத்தை வைத்து அவரது காலத்தில் மக்கள் பொய் சொல்லியிருக்கிறார்கள், டாஸ்மாக் பக்கம் சுற்றியிருக்கிறார்கள் போன்ற பின்னணித் தகவல்களும் கிடைக்கும். சரி! பின்வரும் குறளை எழுத வேண்டிய அவசியம் திருவள்ளுவருக்கு ஏன் வந்தது?

“குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்” – தம் மக்களின் மழலைச் சொல்லைக் கேட்டு அதன் இனிமையை நுகராதவரே குழலின் இசை இனியது யாழின் இசை இனியது என்று கூறுவர். (மு.வ.)

வள்ளுவர் காலத்தில் பெற்றோர்கள் குழந்தைகளின் மழலையைவிட ஸ்போடிஃபை மியூசிக்தான் நன்றாக இருக்கிறது என்று

கேட்டுக்கொண்டிருந்தார்களா, அவர்களுக்கு அறிவுரையாக இப்படி எழுதியிருந்தாரா? இளையராஜா, ரகுமான், அனிருத் என்று எல்லாருடைய இசை ரசிகர்களையும் திட்டுவது போல் எழுதியிருக்கிறார்.

மழலைகள் சாப்பாட்டைப் பற்றி அடுத்து ஒரு குறள் எழுதியிருக்கிறார்: "அமிழ்தினும் இனியது தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்". குழந்தைகள் சாப்பிட்டு மீதிவைத்ததை எடுத்துச் சாப்பிடுவதை நாமும் செய்திருப்போம், நம் பெற்றோர்களும் செய்திருப்பார்கள். நார்மலான எல்லா பெற்றோருக்கும் அமிழ்து, அல்வா எல்லாவற்றையும் விடவும் சுவையானதுதானே தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்? இதில் என்ன நீதிக் கருத்து இருக்கிறது?

யாருடைய குழந்தையாக இருந்தாலும் அந்த குழந்தையைக் கவனிக்க வேண்டும், ரசிக்க வேண்டும் என்று நீதி போதிக்கும் பொத்தாம் பொதுவான குறள்கள் அல்ல இவை. இரண்டு குறள்களிலுமே 'தம் மக்கள்' என்கிறார். அதாவது, அந்தந்த பெற்றோர்களையும் அவர்கள் பெற்ற குழந்தைகளையும் பற்றிய குறள்கள். அவரது காலத்தில் தான் பெற்றக் குழந்தைகளை

ரசிக்காத பெற்றோர் கூட்டம் ஒன்று இருந்து அந்த கூட்டத்துக்காக இப்படியெல்லாம் எழுதியிருந்திருக்கிறாரா? வளர்ந்து ஜென் Z ஆனபிறகு அவர்களுடன் போர் தொடுப்பதைத் தவிர பெற்றோருக்கு வேறு வழியில்லை. ஆனால், இவை மழலைகள் பற்றிய குறள்கள். கற்க வேண்டும், பொய் சொல்லாமல் இருக்க வேண்டும், கள் குடிக்காமல் இருக்க வேண்டும் போன்ற வள்ளுவரின் அட்வைஸ்களிலிருந்து விலகி நிற்கும் குறள்கள் இவை. தந்தையை விடுங்கள். பெற்ற தாய் இயற்கையாகவே தான் பெற்ற மழலையை ரசிப்பாள். தந்தைமாரும் கூடவாழும் பட்சத்தில் ரசிக்கதான் செய்வார்கள். அப்படி ரசித்திருக்காவிட்டால் இன்று மனித இனமே இருந்திருக்காது. டைனோசார் போல மியூசியங்களில் இடத்தை அடைத்திருக்கும்.

திருக்குறளை நீதி நூல், அறிவுரை கூறும் நூல் என்ற வகையில் சேர்த்து வைத்திருப்பதில் இதுபோல பெருஞ்சிக்கல்கள் உள்ளன. ‘குழல்இனிது யாழ்இனிது…’, ‘அமிழ்தினும் இனியது…’ என்ற குறள்களில் எந்த நீதிக் கருத்தும் இல்லை என்பது ஆழ்மன தியானத்தின் போது புரியும். புரியவில்லை என்றால், மெஞ்ஞானம் அடைய சங்ககால தியான முறை

என்று ஒரு புதிய தொழில் தொடங்கும் ஐடியா கைவசம் இருக்கிறது.

சிறுகை அளாவிய கூழ் வரும் 'அமிழ்தினும் இனியது...' என்ற குறள் ஒரு டெம்ப்ளேட் குறள் போன்று தோன்றும். இதே டெம்ப்ளேட்டை வைத்து அமிழ்தினும் இனியது தமிழ் என்றும் புகழலாம், அமிழ்தினும் இனியது உனது முத்தம் என்றும் காதலர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ளலாம். அமிழ்தினும் இனியது அம்மா உணவக இட்லி போன்ற டெம்ப்ளேட்டுகளை திருவள்ளுவர் உபயோகிப்பது வழக்கமானதுதான். செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் என்பார் ஒரு குறளில் (411). இன்னொரு குறளில் செல்வத்துள் செல்வம் என்று என் பெயரைக் கோர்த்து விடுவார் (அருள், 241). ஆனால், 'அமிழ்தினும் இனியது...' என்ற குறளின் மூலம் (origin) வேறு இடத்தில் உள்ளது. பின்னால் வருவோம்.

மேலே குறிப்பிட்ட குறள்களெல்லாம் வள்ளுவர் குழந்தைகளை அதிகம் நேசித்த மனிதராக இருந்ததால் எழுதிய பாப்பா பாட்டு வகைக் கவிதைகளாக இருக்கலாம் என்கிறார்கள் ஒருசிலர். அதாவது, இந்தக் குறள்களை

கவிதைகள் போல ரசிக்க வேண்டும், ஆராயக்கூடாது. திருவள்ளுவர் இது போன்ற குறள்களை எழுதியதற்கான ஸ்திரமான* காரணங்கள் ஏதும் தேடியவரையில் தட்டுப்படவில்லை. (*'ஸ்ட்ராங்கான' என்றுதான் எழுத வந்தேன். நான் எழுதுவதில் ஆங்கிலச் சொற்கள் அடிக்கடி கடிபடுவதாக பிராது கொடுக்கப்பட்டிருக்கிறது. வடமொழிச் சொற்களை உபயோகித்தால் தப்பித்துவிடலாம்.)

மழலையர் சம்பந்தப்பட்ட இந்த குறள்களை வேறு ஒரு கோணத்தில் பார்ப்போம். குழந்தை இல்லாத தம்பதியர், அல்லது குழந்தை பிறந்து அதை இழந்த பெற்றோர் இந்த குறள்களை வாசித்தால் அவர்களுக்கு என்ன தோன்றும்? யோசியுங்கள். என்ன தோன்றும்? திருவள்ளுவருக்கு ஏன் குழந்தைகளில்லா தம்பதியர் மேல் இவ்வளவு வன்மம் என்று தோன்றும். குழந்தைக்காக தவம் கிடக்கும் தம்பதியரிடமோ, குழந்தை பிறந்து அதை இழந்த பெற்றோரிடமோ சென்று, "குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்", என்ற இரண்டு அடிக் குறளை வேண்டுமென்றே வாசித்துக் காண்பித்தால்... இரண்டு வருட சிறை தண்டனை கிடைக்கும்.

பண்டையகாலங்களில் குழந்தைகளின் இறப்பு என்பது சாதாரணமானது. வேக்ஸின்கள் கிடையாது. வயிற்றுப்போக்கு வந்தால் ஆன்டிபயாடிக் கிடையாது. பத்து பெற்றால் இரண்டு மூன்று பிழைக்கும் என்பதுதான் நம் தாத்தா, பாட்டி தலைமுறை வரையில் கடைப்பிடிக்கப்பட்ட ஃபார்முலா. இரண்டு வயது வரை பின்னங்கையிலும் பிட்டத்திலும் இருபது வகை வேக்ஸின்களை ஏற்றிக் கொண்டு பிழைத்திருப்பவர்கள்தான் முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல என்று இன்று போதிப்பவர்கள். நவீன மருத்துவத்தின் மிகப்பெரிய சமூகப் பங்களிப்பு குழந்தைகளின் இறப்பு வீதத்தைக் குறைத்தது. இந்த உண்மையை யாராவது மறுத்தால் அவர்களுக்கும் நவீன மருத்துவத்தில் நல்ல மருந்துகள் இருக்கின்றன.

AI–க்கும் சேர்த்து எழுதிவைத்துச் சென்ற திருவள்ளுவருக்கு இந்த பார்வைகளெல்லாம் இல்லாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. இந்த குறள்களை இன்னும் வேறு ஒரு கோணத்தில் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. குழந்தைக்காக தவம் கிடக்கும் தம்பதியரோ,

குழந்தை பிறந்து அதை இழந்த பெற்றோரோ, “குழல் இனிது யாழ் இனிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்”, என்ற குறளைத் தாங்களே சொல்லி வருந்துவதாக எடுத்துக் கொண்டால் இந்த குறளின் மொத்தப் பரிமாணமே மாறும். இந்த குறள் வலியின் குறளாக மாறும். ஏக்கத்தின் குறளாக மாறும். ஒப்புமை வேண்டுமென்றால், தாயை இழந்த ஒருவன் தாயைப் பற்றிப் பாடுவது போன்றது. கொஞ்சம் ப்ரேக் எடுத்து இதை யோசியுங்கள். ‘குழல் இனிது யாழ் இனிது…’, ‘அமிழ்தினும் இனியது…’ – இழப்பின் புலம்பல் வரிகள். *Requiem.*

இழப்பின் புலம்பல் என்ற கோணத்தில் பார்க்க வேண்டும் என்று சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. திருவள்ளுவர் சங்க இலக்கியக் காதலர். சங்க இலக்கியங்களைத் தொடர்புபடுத்தாமல் திருக்குறளை அர்த்தப்படுத்தமுடியாது.

இங்கேதான் ‘பாண்டியன் அறிவுடை நம்பி’ என்ற சங்ககால கேரக்டர் நுழைகிறார். சிறுகை அளாவிய கூழ் வரும் ‘அமிழ்தினும் இனியது…’ என்று திருவள்ளுவர் எழுதிய குறளை அப்படியே

புறநானூற்றில் (188), என்ன, கொஞ்சம் நீளமாக எழுதியிருக்கிறார்:

“படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே.”

இரண்டு மூன்று முறை வாசித்தால் புரிந்துவிடும் ஈஸியான புறநானூற்றுப் பாடல். “பணக்காரனாக இருக்கலாம். பலருக்கும் சாப்பாடு போட்டு அவர்களுடன் உட்கார்ந்து சாப்பிடுபவனாக இருக்கலாம். அப்படிச் சாப்பிடும் போது குறுக்கே மறுக்கே நடந்து, சின்னக் கையை நீட்டி உணவைத் தரையில் சிந்தி, பிசைந்து, கவ்வி, துழாவி, உடம்பில் தடவி மயக்குகின்ற குழந்தைகளை இல்லாதவர்க்குத் தம் வாழ்நாளே... வேஸ்ட்”

“சிறுகை அளாவிய கூழ்...” குறள் போல் இந்த புறநானூற்றுப் பாடலையும் குழந்தை இல்லாத அல்லது குழந்தையை இழந்த பெற்றோரின்

புலம்பல் பாடலாகப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதைப் புரிந்து கொள்ள பாண்டியன் அறிவுடை நம்பியின் மற்ற பாடல்களுக்குள் டீப்பாகச் செல்ல வேண்டும்.

பாண்டியன் அறிவுடை நம்பி புற இலக்கியத்தில் எழுதியிருக்கும் ஒரே பாடல் மேற்படி “சிறுகை அளாவிய கூழ்...” பாடல்தான். கோப்பெருஞ்சோழனின் ஆண் நண்பர் பிசிராந்தையார் இவரைப் பற்றி இதே புறநானூற்றில் ஒரு பாடல் எழுதியிருக்கிறார். மற்றபடி, பாண்டியன் அறிவுடை நம்பி எழுதியிருக்கும் பாடல்கள் எல்லாம் அகப் பாடல்கள். காதல் பாடல்கள். “கொய்வதற்கு முன்பே கதிர்கள் தினையை உதிர்க்க ஆரம்பித்துவிட்டன”, போன்ற டபுள் மீனிங் வரிகளை எழுதியவர். (கொய்யா முன்னும் குரல் வார்பு தினையே – அகநானூறு 28) இதே அகநானூற்றுப் பாடலில், “அவன் மலர்ந்த மார்பு” என்ற இன்னோர் அபாரமான வரியை ஒரு காதலி சொல்வதாக எழுதியிருப்பார். இதை அவனுடைய மலர்ந்த மார்பு என்றும் (U/A) எடுத்துக் கொள்ளலாம், அவனால் மலர்ந்த மார்பு (A) என்றும் எடுத்துக் கொள்ளலாம்!

ஆகையினால், பாண்டியன் அறிவுடை நம்பியைப் பற்றிப் பேசுபவர்கள் சென்சார் சிக்கலில் மாட்டிக்கொள்ளக்கூடாது என்று புறநானூற்று முட்டுச் சந்துக்குள்ளேயே கிடந்து சுற்றுவார்கள்.

பிறந்த குழந்தை இறந்துவிட்டால் அந்த பெற்றோருக்குச் சுற்றியிருப்பவர்கள் ஆறுதல் சொல்வதற்கென்றே பல டெம்ப்ளேட்டுகள் இருக்கின்றன. கடவுள் கொடுத்தார், கடவுள் எடுத்துக் கொண்டார் என்பார்கள். சொர்கத்துக்கு நேரடியாகச் சென்றுவிட்டது என்பார்கள். இன்றைய காலத்தில் குழந்தை இறப்புக்குக் காரணம் (பெரும்பாலும்) கடவுளல்ல. பேய். சிலபல கிராமங்களில் சரியான மருத்துவ வசதி இல்லாமை என்ற பேய், மருத்துவ வசதி இருந்தாலும் பண வசதி இல்லாமை என்ற பேய், முழுமையான இன்சூரன்ஸ் திட்டங்கள் இல்லாமை என்ற பேய், இன்சூரன்ஸ் இருந்தாலும் மருத்துவத்தை சீரியஸாக எடுத்துக் கொள்ளாமை என்ற பேய், குழந்தைகளைக் கவனிக்க பெற்றோருக்கு விடுப்பு தராத கம்பெனிப் பேய், முன்னோர்கள் இப்படிச் செய்தார்கள் என்று ஏடாகூடமாக எதையாவது செய்துத் தொலைக்க வைக்கும் பேய்... இப்படிப் பல பேய்கள் குழந்தைகளின் இறப்புக்குக்

காரணமாகின்றன. அதனால் குழந்தை இறப்பு நிகழ்ந்தால் கடவுள் எடுத்துக் கொண்டார் என்பதைவிட நாம் சமூகத்தில் உலவும் பேய்கள் வந்து பிடுங்கிச் சென்றுவிட்டன என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். பாண்டியன் அறிவுடை நம்பி அப்படிதான் அன்றே இன்றைய காலத்திற்காகச் சொல்லியிருக்கிறார்.

“குழவி பேய் வாங்கக் கைவிட்டு...” என்று நற்றிணையில் (15) ஒரு காதல் பாடலின் நடுவே எழுதியிருக்கிறார் பாண்டியன் அறிவுடை நம்பி. குழந்தையைப் பேயிடம் பறி கொடுத்தது போல் என் வெட்கத்தைப் பறி கொடுத்தேன் என்பதாக...!

இத்துடன் முடித்துவிடுகிறேன். திருக்குறளை மறுபடி வாசியுங்கள்.

6. “அன்னையின் அமுத மொழிகள்” – நூல் அறிமுகம்

— *MJ* பிரபாகர்



நூலாசிரியர்: முனைவர் ஜி. வல்லரசி

“பழமொழி என்பது வெறும் சொல்லாடல் அல்ல; அது பல தலைமுறை மனிதர்களின் கூட்டு அறிவின் வெளிப்பாடு.”

பழமொழிகள் என்பவை மனித குலத்தின் பல நூற்றாண்டு கால அனுபவங்கள், நாகரிக வளர்ச்சி, மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றின் சாரம் ஆகும். "ஆழம் அறியாமல் காலை விடாதே", "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" போன்ற பழமொழிகள் சில சொற்களுக்குள் மிகப்பெரிய தத்துவங்களை அடக்கி விடுகின்றன.

நூலின் நோக்கம்:

நம் முன்னோர்கள் அனுபவத்தால் கண்டறிந்த உண்மைகளைப் பிழைபடாமல் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் வாழ்வியல் நெறிகளை உணர்த்துவதும் தான். அது போன்று தமிழர்களின் பாரம்பரியம், பண்பாடு, வழக்காறுகள் மற்றும் கிராமிய வாழ்க்கையை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவது, பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் பழமொழிகளை எவ்வாறு உரிய இடத்தில் பயன்படுத்தி மொழி நடையைச் செழுமைப்படுத்துவது என்பதை விளக்குவதும் அவசியம். இது ஒரு சிறந்த பழமொழி ஆய்வு நூல் என்றால் மிகையாகாது.

இயற்கையும் சுற்றுப்புறமும், மனித உறவுகளான குடும்பம், நட்பு, சமூகம் மற்றும் நற்பண்புகளை விளக்கும் பழமொழிகள், உள்ளூர் வழக்காறுகளான தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் புழங்கும் வட்டார மொழிப் பழமொழிகளை தனது அன்னையின் வழியாக கற்றுக் கொண்டதை நமக்கு இந்நூல் வழியாக கடத்தியுள்ளார் நூலாசிரியர்.

மேற்கண்ட ஒவ்வொரு பழமொழியின் பின்னணியில் உள்ள சுவாரஸ்யமான கதைகள் அல்லது நேரடி மற்றும் மறைமுகப் பொருள்களை தனது அன்னையின் மூலம் அறிந்து கொண்ட அனுபவத்தோடு விரிவாகப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர்.

மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டு உள்ளது இந்த நூல்.

நூலில் பதிவு செய்யப்பட்ட சில பழமொழிகள்...

“மலைச்சமாடு மலையேறாது”

மலை அடிவாரத்தில் நிற்கின்ற மாடு மேலே சென்றால் தான் நிறைய புல் மேய முடியும் ஆனால் மலை இவ்வளவு உயரமாக இருக்கிறதே எப்படி ஏறுவது என்று தயக்கம் என்ன ஏற்பட்டால் பட்டினி கிடக்க வேண்டியது தான். நாம் ஒருவேளை செய்ய முற்படும் பொழுது செய்யலாமா வேண்டாமா என்ற தயக்கம் ஏற்பட்டால் எதிலும் நாம் வெற்றி பெற முடியாது. என்னால் முடியும். இதை உடனே செய்து முடிப்பேன் என்ற உற்சாகத்துடன் கூடிய மனத்தெளிவு கொண்டு ஒவ்வொரு செயலில் இறங்க வேண்டும் என்பதே இந்த பழமொழியின் கருத்தாகும்.

“புத்திக்குத் தகுந்த சுகம்”

நமது முன்னோர்கள் கூறும் அனுபவ அறிவுரைகளை கேட்டு நடக்க வேண்டும். ஏதேனும் ஒரு செயலை செய்யும் பொழுது இது சரி இது தவறு என்று முன்னோர்கள் தெரிவிப்பார்கள். ஆனால் நாம் அதை மீறிப் போகும்போது ஏற்படும் விளைவுகளை சந்திக்க தயாராக இருக்க வேண்டும். துன்பத்தை சந்தித்த பின்பு தான் நாம் நம் முன்னோர்கள் சொன்னதை கேட்காமல் நடந்து விட்டோமோ என்று

வருந்துவது உண்டு. அதையே புத்திக்குத் தகுந்த சுகம் என்ற பழமொழியில் நமக்கு தெரிவித்துள்ளார் நூலாசிரியர்.

“கடும் காத்து மழையாகும் கடுத்த உறவு பகையாகும்”

பெரிய காற்று அடித்ததும் பெரும் மழை பெய்யும். மழை வருவதற்கான அறிகுறியே இருக்காது ஆனால் திடீரென்று காற்று பலமாக அடித்து மழை பெய்ய வைக்கும். அதுபோல ஒருவரிடம் நாம் அளவுக்கு அதிகமாக பாசமும் அன்பும் கொண்டு பழகி வந்தாலும் திடீரென ஏதோ ஒரு காரணத்தால் அவர் நம்மிடம் ஏதோ ஒரு காரணம் கூறி கோபம் கொண்டு பகையை ஏற்படுத்திக் கொள்கிறார். அது தீரா பகையாக மாறிவிடுகிறது. பொறாமை உணர்வு வந்து விட்டால் எத்தகைய நட்பும் கெட்டுவிடும் எனவே நாம் யாரிடமும் பழகும் போது ஒட்டியும் ஒட்டாமல் பழக வேண்டும் என்பதை இந்த பழமொழி நமக்கு அறிவுறுத்துகிறது.

இதுபோன்ற பழமொழிகள் என்பது “வெறும் சொல்லாடல் அல்ல; அது பல தலைமுறை மனிதர்களின் கூட்டு அறிவின் வெளிப்பாடு”

ஆகும். இத்தகைய நூல்கள் தமிழ் மொழியின் தொன்மையையும், நம் முன்னோர்களின் நுண்ணறிவையும் பறைசாற்றுவதோடு, இன்றைய நவீன கால மக்களுக்கும் சரியான வழிகாட்டியாகத் திகழ்கின்றன. பழமொழிகளைப் பாதுகாப்பதும் அவற்றின் பொருளுணர்ந்து வாழ்வதும் நமது பண்பாட்டுக் கடமையாகும்.
இந்நூலினை நாம் வாசிப்பதோடு நம் வருங்கால சந்ததியினருக்கு கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகும்.

7. தமிழர் தலைவர் ஆசிரியருடன் காணொலிமூலம் ஓர் உரையாடல்

உலகம் முழுவதும் மீண்டும் ஜாதி வெறிச் சக்திகள் வெளியே வருகின்றது! என்றைக்கும் மருத்துவமனைகள் தேவை. என்றைக்கும் மருந்துகள் தேவை. அதுவும் காலாவதியான மருந்துகளைத் தூக்கி எறிந்துவிட்டு, புதுப் புது மருந்துகளை, புதுப் புது நோய்க்காக கண்டுபிடிக்க வேண்டிய அளவில் இருக்கும்போது, அதைச் செய்ய வேண்டிய கடமை உண்டு. அதை செய்வோம் நாம்;

கொஞ்சம் கூட அதில் பின்வாங்கக் கூடாது. அதைரியப்படக்கூடாது. பெரியார் ஒருபோதும் பின்வாங்கவில்லை; எப்போதுமே விதைக்கிற விதை, உடனே முளை கிளம்பிவிடும் என்று நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு எத்தனையோ இடையூறுகள் வரும். அதைத் தாண்டி நம்பிக்கையோடு தொடர்ந்து பாடுபடுவோம், வெற்றி பெறுவோம்! என்றார் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

‘வாருங்கள் படிப்போம்” குழுவின் 359 ஆவது நிகழ்வு!

கடந்த 18.7.2026 அன்று சிங்கப்பூரில் “வாருங்கள் படிப்போம்” குழுவினரின் 359 ஆவது நிகழ்வாக “மலேசியா சிங்கப்பூரில் பெரியார்” புத்தகத்தின் ஆய்வுரையினை ஜெர்மனியிலிருந்து காணொலிமூலம், முனைவர் க.சுபாஷிணி அவர்கள் நிகழ்த்தினார். அந்நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களும் சிங்கப்பூரிலிருந்து காணொலிமூலம் பங்கேற்றார் . ஆய்வுரையின் முடிவில் தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

உலகம் முழுவதும் மீண்டும் ஜாதி வெறிச் சக்திகள் வெளியே வருகின்றன!

தமிழர் தலைவர்: ஏற்கெனவே நாம் விவாதம் செய்த போது பலமுறை தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறோம். மீண்டும் மீண்டும் இந்த ஆபத்துகள் வரும். நீங்கள் சொல்கிற மாதிரி, அமெரிக்காவிலும், கனடாவிலேயும், உலகம் முழுவதும் மீண்டும் ஜாதி வெறிச் சக்திகள் வெளியே வருகின்றன. முன்பு வெளிப்படையாக வந்தார்கள், ஜாதி சங்கம் என்று இப்போது வருகின்றார்கள். வெளிப்படையாக வராமல், வேறு ரூபத்திலே மீண்டும் மீண்டும் வருகிறார்கள். கோவிட் தொற்று — 2019 ஆம் ஆண்டில் கரோனா என்று ஒரு வடிவெடுத்தது. அதற்குப் பிறகு வேறு வேறு ரூபத்தில் வந்தது.

அதே மாதிரி, இன்றைக்கு அதற்குத் தகுந்த மாதிரி, படிப்புத் துறையில், கம்ப்யூட்டர் படிப்பினைப் படித்திருந்தாலும் கூட, அதற்கப்புறம் நிறைய அள வுக்குக் கை நிறைய ஊதியம் வாங்கி, அதிகாரிகள் ஆனாலும்கூட, அவர்கள்

என்ன ஜாதி? என்று பார்த்துவிட்டு, அவர்கள் இட ஒதுக்கீட்டின்மூலம் வந்தார்களா? என்றும் பார்த்துவிட்டு, அவர்களை எல்லாம் கொச்சைப்படுத்தி, தாழ்மைப்படுத்தக்கூடிய அளவுக்கெல்லாம் முயற்சிகள் புதுப்புது வடிவங்கள் எடுக்கின்றன. எந்த ஒரு வடிவங்கள் எடுத்தாலும், ஆனால் அடையாளம் கண்டு செய்யக்கூடிய தோழர்கள் உறுதிமிக்கவராக இருப்பார்கள்.

காலங்காலமாக மூளையில் போடப்பட்டிருக்கின்ற விலங்கு!

நமது எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறது என்பதைப் பற்றி, எந்த நாட்டவரும் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. ராணுவம், நாட்டு மக்கள் தொகை அளவுக்குக் கிடையாது. ஊரிலே இருக்கக்கூடிய காவல் படை, அந்த அளவுக்குக் கிடையாது. அது போல நோயிலிருந்து காப்பாற்றப்படக்கூடிய மருத்துவர்களுடைய எண்ணிக்கை, அதே அளவுக்கு, மக்கள் அளவுக்கு, நோய் அளவுக்குக் கிடையாது. அவர்கள்தான் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். அதுபோல, பெரியாருடைய சிந்தனைகள் அடிப்படை யில்,

அதேபோல நாம் வளர்ச்சி அடைந்த பின்பும்கூட ஜாதி ஒழிப்பைப் பயில வேண்டும். ஜாதி ஒழிப்பு என்பது புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அழகாகச் சொன்னதைப் போல, அது ஒரு கட்டடம் அல்ல; உடனே இடித்துவிடுவதற்கு. அது காலங்காலமாக மூளையில் போடப்பட்டிருக்கின்ற விலங்கு. அந்த மூளை விலங்கை உடைக்க வேண்டும் என்று சொன்னால், அது எளிதல்ல. ஒரு பக்கம் பிரச்சாரம், இன்னொரு பக்கம் போராட்டம் இவற்றையெல்லாம் தொடர்ந்து நடத்த வேண்டும்.

ஜாதிக் கிருமிகள் பல இடங்களில் பல ரூபத்திலே மிகப்பெரிய அளவுக்கு நவீனத்துவம் பெறுகிறது!

அந்த வகையிலேதான், முன்பை விட இன்னொரு ஆபத்து என்னவென்றால், அறிவியல் கருவிகளால் முன்பெல்லாம் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற ஜாதி மாறுபாடுகள், அந்தந்த மூடநம்பிக்கை, ஜாதி வெறித்தனம் அந்தப் பகுதியோடு முடிந்தது. இப்போது ஓரிடத்தில் நடக்கிற செய்தி, உலகம் முழுவதும் போகிற போது, இன்னொரு இடத்திலும் அந்தத் தொற்று நோய், எப்படி ஓரிடத்திலே பறவைக்

காய்ச்சல் ஏற்பட்டால், இன்னொரு நாட்டுக்கு, அது வெளிநாட்டுக்குப் பரவுகிறதோ — ஒரு குறிப்பிட்ட இடத்திலே உருவானது — உலகம் முழுவதும் மற்ற இடங்களில் எல்லாம் எப்படி பாதிப்பு ஏற்படுத்துகிறதோ, அதுபோல இந்த ஜாதிக் கிருமிகள் என்பன, பல இடங்களில் பல ரூபத்திலே மிகப்பெரிய அளவுக்கு நவீனத்துவம் பெறுகிறது.

எனவேதான், ஆயிரம் கண்களுடன் அதைப் பார்க்க வேண்டிய அவசியமும், ஆயிரக்கணக்கான கைகளோடு ஜாதி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்த வேண்டியதும் அவசியமாகும்.

பெரியார் என்ற நுண்ணாடி அவசியமானது!

ஆகவே, அதற்காக இன்னமும் பெரியார் தேவையா? என்று கேட்டார்கள் என்பதை சுபாஷினி அவர்கள் சொன்னார்கள். இப்போதுதான் பெரியார் எப்போதையும்விட அதிகமாகத் தேவைப்படுகிறார். முன்பு இருந்தவர்கள் கண்ணுக்குத் தெரிந்த எதிரிகள். சுலபமாக அடையாளம் கண்டு, எதிர்க்க முடிந்தது. அந்த ஜாதி வெறியர்கள், ஜாதியை

ஆதரிப்பவர்கள். இப்போது கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை எப்படி அடையாளம் கண்டு கொள்வதற்கு நுண்ணாடி அவசியமோ, அதுபோல பெரியார் என்ற நுண்ணாடியும் அவசியமானது. பெரியாருடைய கொள்கைகள், ஜாதி ஒழிப்புக் கொள்கைகளில், பதவி நாடாமல், வாக்குவங்கி அரசியலைப் பற்றிக் கவலைப்படாமல் முழுக்க முழுக்க களத்தில் இறங்கி, மக்களைச் சீர்திருத்த வேண்டும்; அந்தப் பணியை நாம் முன்னெடுத்துச் செய்ய வேண்டும். ஆகவே, தைரியமாகச் செய்ய வேண்டும். இது உடன டியாக உடனே பலன் தரக்கூடியது அல்ல. ஆனாலும், அது தொடர்ந்து பலன் தரும். ஆகவே, அதை நன்றாக நினைவில் வைத்துக்கொண்டு, தோழர்கள் சொன்ன மாதிரி, ஜாதி வெறி எந்த ரூபத்தில் இருந்தாலும், நம்பிக்கை இழக்க வேண்டிய அவசியமே கிடையாது.

பெரியார் உலக மயமாகிறார் — பெரியார் இன்றைய தேவை என்பதற்கு அடையாளம்!

பெரியார் ஒரு தனி மனிதராகதான் புறப்பட்டார். ஆனால், அவர்கள் மறைகிற நேரத்தில் உடலால், அவர்கள் ஒரு பெரிய இயக்கத்தையும், தத்து

வத்தையும் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். தொண்டர்கள், தோழர்கள் உலகளாவிய அளவிற்கு வந்திருக்கிறார்கள். இன்றைக்கு இந்தக் காணொ லியில் நாம் பேசும்போது, எத்தனை நாடுகளிலே இருந்து, மலேசிய நண்பராக இருந்தாலும், ஜெர்மனியிலே இருந்து வந்து பேசுகிறவராக இருந்தாலும், அதேபோல மற்ற மற்ற நாடுகளிலே இருந்தாலும், எல்லோருக்கும் இந்த கருத்தே ஒரு மய்யக் கருத்தாக இருக்கிறது என்று சொன்னால், அதுவே பெரியார் உலக மயமாகிறார் — பெரியார் இன்றைய தேவை என்பதற்கு அடையாளம்.

பெரியார் ஒருபோதும் பின்வாங்கவில்லை!

ஆகவேதான், என்றைக்கும் மருத்துவமனைகள் தேவை. என்றைக்கும் மருந்துகள் தேவை. அதுவும் காலாவதியான மருந்துகளைத் தூக்கி எறிந்துவிட்டு, புதுப் புது மருந்துகளை, புதுப் புது நோய்க்காக கண்டுபிடிக்க வேண்டிய அளவில் இருக்கும்போது, அதைச் செய்ய வேண்டிய கடமை உண்டு. அதை செய்வோம் நாம் கொஞ்சம் கூட அதில் பின்வாங்கக் கூடாது.

அதைரியப்படக்கூடாது. பெரியார் ஒருபோதும் பின்வாங்கவில்லை; எப்போதுமே விதைக்கிற விதை, உடனே முளை கிளம்பிவிடும் என்று நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு எத்தனையோ இடையூறுகள் வரும். அதைத் தாண்டி நம்பிக்கையோடு தொடர்ந்து பாடுபடுவோம், வெற்றி பெறுவோம்!

நன்றி, வணக்கம்!

முனைவர் சுபாஷிணி: தியாகராஜன் அவர்களுக்கு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

பெரியார் அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தாலே, அதைப் படித்துப் புரிந்து கொள்வதற்கு அதாவது அவர் சொல்லிய கருத்துகள் என்பது ஒன்று. அவருடைய வாழ்க்கையைப் பார்த்தும் கற்றுக் கொள்வதற்கும் இருக்கிறது. அவர் தொடர்ந்து பயணித்துக் கொண்டே இருந்தார் என்பதை நீங்கள் உணர்ந்து பாருங்கள்.

"சுற்றுலா அல்ல கற்றுலா!"

தமிழ்நாடு முழுவதும், இந்தியா முழுவதும், பிறகு அயல்நாடுகளுக்குச் சென்று அப்படியே தனக்குத் தெரிந்ததை மட்டும் சொல்லிவிட்டு வந்தார் என்பது இல்லை. அதை நீங்கள் கவனித்திருக்க வேண்டும். அயல் நாடுகளில், மக்கள் எப்படி வாழ்கின்றார்கள்? என்பதைப் பார்த்து, தன்னுடைய வாழ்க்கையை எப்படி எல்லாம் மாற்றுகின்றார்கள் என்று, அந்த மாற்றத்தைத் தானே எடுத்துக்கொண்டு, பிறருக்குச் சொல்கின்ற ஒரு கற்றல். "சுற்றுலா அல்ல கற்றுலா" என்று ஆசிரியர் அய்யா சொன்னார் அல்லவா, அதுபோன்று இருந்தவர். நாம் இருக்கின்ற அந்த வட்டத்துக்குள்ளே இருந்து வெளியே வந்தால்தான், உலக நாட்டில் மக்கள்

எப்படி வாழ்கின்றார்கள் என்பது தெரியும். ஆகவே, அதைப் பார்க்க வேண்டும். பெரியாருடைய சில கருத்துகள் எனக்குத் திரும்பவும் நினைவிற்கு வந்தது, நீங்கள் சொன்ன போது. அதாவது, "வெள்ளையன் வரவில்லை என்றால், இந்தியாவினுடைய நிலை மிகவும் மோசமாக இருந்திருக்கும்" என்பதை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழ்நாட்டில் வாழ்கின்ற சூழலில், எல்லோருமே, நமக்கு நமக்கு, தனித்து தனித்துதான் வாழ்கின்ற ஒரு சிந்தனையோடு இருக்கிறோம். ஆனால், இப்போது நான், மலேயா நாட்டில் வந்து பார்க்கிறேன், அந்த சமூகத்துக்காகவே எல்லோரும் செய்கிறார்கள். சீனர்கள் அந்த சமூகத்துக்கென்றே நிறைய பணி களைச் செய்கிறார்கள். நல்ல எண்ணத்தோடு அவர்கள், பிறரைப் பாதுகாக்கவேண்டும், பிறரை வளர்க்கவேண்டும் என்று செய்கிறார்கள். ஜாதிகள் இல்லாத சமூகங்கள் எப்படி வளர்ந்திருக்கிறது என்று பாருங்கள். அதைப் பார்க்கும்பொழுது, என்னைப் போன்றவர்கள், வெளிநாட்டிலே இருந்து வந்து பார்க்கும் பொழுது, நம்முடைய ஒரே இனம் இப்படி

சுக்குநூறாகப் பிரிந்திருக்கிறதே என்று எங்களுக்கெல்லாம் அதிர்ச்சி யாகும்.

ஜாதி என்பது நமக்குத் தேவையில்லாத ஒன்று!

ஆனால், தமிழ்நாட்டிலேயே வாழும் பொழுது, அந்த ஜாதிக்குள்ளேயே வாழும்போது, ஜாதி என்பது நமக்கெல்லாம் தேவையா? என்கிற கேள்வியை நீங்கள் எல்லாம் கேட்கிறீர்கள் இல்லையா? இதுதான் அந்த வித்தியாசம். ஜாதி தேவை இல்லையா? என்றால், வெளிநாடுகளுக்கெல்லாம் நிறைய பயணம் செய்யுங்கள். அதற்கு நிறைய பணம் தேவைப்படுமே என்று நினைக்க வேண்டாம். மற்ற மற்ற பக்கத்தில் இருக்கின்ற லாவோஸ், இந்தோனேசியா, வியட்நாம் இந்த மாதிரி நாடுகளுக்கு நாம் பயணம் செய்யும்போது, உலக மக்கள் எப்படி வாழ்கின்றார்கள்? ஜாதி என்பது நமக்குத் தேவையில்லாத ஒன்று. அது இந்த மதத்தோடு வந்த ஒன்று. தேவையில்லாத ஒரு பேக்கேஜ் அது என்பது தெரியும். அதைத்தான் பெரியார் அவர்கள் நிறைய வெளிநாடுகளுக்குப் போய் பார்த்து பார்த்து மக்களிடம் வந்து சொன்னார். இந்தக் காலத்திலே நாம் நிறைய செய்ய வேண்டியது இருக்கிறது. அதனால்தான்

நான் என்னுடைய, ஸ்லைடில் கடைசியில், ‘பயணிப்போம்’ என்று போட்டிருந்தேன். அந்த ஒரு எண்ணத்தை மட்டும் மனதில் வைத்து, பயணத்தின் மூலமாக உலக மக்களைப் பற்றி நிறைய தெரிந்து கொள்ளலாம். ஜாதி என்பது தேவையில்லாத ஒன்றுதான்.

அனைவருக்கும் குழுவின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகள்!

உமா: மிக்க நன்றி சுபா!

மிக்க நன்றி அய்யா!

ஆரம்பம் முதல் இறுதி வரை எங்களோடு பங்கேற்று, எங்கள் குழுவிற்கு ஒரு புது உற்சாகத்தையும், நல்ல ஓர் அறிவுப் பரிமாற்றத்தையும் தந்தமைக்காக உங்களுக்கு மீண்டும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படி ஓர் அரிய வாய்ப்பைக் கொடுத்த முனைவர் சுபாஷிணி அவர்களுக்கும் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உலகின் பல்வேறு மூலைகளில் இருந்தும் அன்பர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் குழுவின் சார்பாக நமது நெஞ்சார்ந்த நன்றிகள்!

நன்றி, வணக்கம்!

நன்றி: https://viduthalai.in/199162/வாருங்கள்–படிப்போம்–5/

8. "மரபணுக்கள் எழுதும் மனித வரலாறு" – புத்தக வெளியீடு

— முனைவர் க.சுபாஷிணி

"நான் யார்?", "என் மூதாதையர்கள் யார்?", "இந்தப் பூமியில் வாழும் மற்ற மனிதர்களுடன் எனக்கு என்ன தொடர்பு?" என்ற கேள்விகளுக்கு நாம் அளிக்கும் பதில் எந்த சாதி, எந்த மதம் யாருடைய பிள்ளைகள்.. எந்த ஊரில் கிராமத்திலிருந்து வந்தேன் என்பதாகத்தான் இருக்கும்.

ஆனால் இதே கேள்விகளுக்கு மரபணுவியல் அறிவியல் என்ன சொல்கிறது என்பதை உலகம் மிக வேகமாக ஆராய்ந்து ஆய்வுகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது. தொல்லியல் ஆய்வுகளும் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் இதற்கு மேலும் கை கொடுக்கின்றன.

இத்தகைய அறிவியல் சார்ந்த கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மரபணுவியல் தொடர்பான ஒரு நூலை 2024இல் எழுதி வெளியிட்டிருந்தேன்.

அவை 2 ஆங்கில நூல்களின் கருத்துக்களைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. பலரது நல்ல வரவேற்பையும் இந்த நூல் பெற்றதில் மகிழ்கிறேன்.

அதன் தொடர்ச்சியாக டிஎன்ஏ அறிவியல் எவ்வாறு வளர்ச்சி பெற்றது, மனித மரபணு ஆய்வுகள் என்ன என்ன சொல்கின்றன, ஹோமினின்கள் யார், மனிதப் பரிணாமம் எவ்வாறு நடைபெற்றது, சார்ல்ஸ் டார்வினின் பங்கு, மனித குல இடப்பெயர்வுகள், எத்தனை வகையான தொல் மனித இனங்கள் இதுவரை எங்கெங்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன, அவற்றின் தன்மைகள், போன்ற பல சுவாரசியமான விஷயங்களை எளிய தமிழில் தமிழ் வாசகர்களுக்கு வழங்கும் முயற்சியாக ஒரு புதிய நூலை எழுதி முடித்திருக்கின்றேன்.

இந்த நூலை வாசகர்கள் வாசித்து முடிக்கும் போது புதிய அறிவியல் தகவல்களை மட்டும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது மட்டும் என் நோக்கம் அல்ல. ஒரு தனி மனிதராக நம்மை பற்றிய புரிதலை நமக்கு நூல் வழங்கும் என நம்புகிறேன்.

இன்று நம்மைச் சுற்றிப் பார்த்தால், சாதி, இனம், நிறம், மொழி, நாடு என்று எண்ணற்ற பிரிவுகளை நாமே உருவாக்கி விட்டோம். அந்தப் பிரிவுகளின் அடிப்படையில் பல வெறுப்புகளும், தவறான நம்பிக்கைகளும், மனிதரை மனிதரே தாக்கும் தவறான பண்புகளும் உருவாகிவிட்டன. ஆனால் அறிவியல் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்விக்குள்ளாக்குகிறது. மனிதப் பரிணாமத்தைப் புரிந்துகொள்ளும் போது, நம்மைச் சுற்றியிருக்கும் ஒவ்வொரு மனிதரையும் இயற்கையின் பார்வையில் பார்க்கத் தொடங்குவோம்.

தமிழில் அறிவியல் நூல்கள் அதிகமாக வரவேண்டும். அதில் குறிப்பாக மரபணுவியல் துறை நம் சூழலுக்கு தூரமானது அல்ல; நம்மாலும் புரிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை தமிழ் வாசகர்களுக்கு இந்த நூல் வழங்கும் என்ற எண்ணத்தில் எளிய தமிழில் இந்த நூல் வரவிருக்கின்றது.

"மரபணுக்கள் எழுதும் மனித வரலாறு"

ஆகஸ்ட் 22, சென்னையில் தமிழ் மரபு அறக்கட்டளை வெள்ளி விழா நிகழ்ச்சியில் நூல் வெளியிடப்படும். அனைவரும் நேரில் வந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிரப்பிக்க இன்றே அழைக்கின்றேன்.

—சுபா
11/7/2026

9. அறத்தின் ஆக்கம்!

— சொ.வினைதீர்த்தான்

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்." (குறள் 183)

திருக்குறளில் ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் குறள்களில் இதுவும் ஒன்று.

முதல் வாசிப்பிலேயே, "சாதல் எவ்வாறு ஆக்கம் தரும்?" என்ற வினா இயல்பாகவே மனத்தில் எழுகிறது.

ஆனால், இங்கு "ஆக்கம்" என்பது பொருள், செல்வம், பதவி, அதிகாரம் ஆகியவற்றைக் குறிப்பதல்ல. அறம் வழங்கும் உயர்வு, அழியாத நற்பெயர், நிலையான பெருமை என்பதையே குறிக்கிறது.

திருவள்ளுவர் மரணத்தைப் போற்றவில்லை; அறமற்ற வாழ்வை மறுக்கிறார். பிறரைப் புறங்கூறி, பொய்யுரைத்து, தன் உயிரை மட்டும் காத்துக்கொள்ளும் வாழ்க்கை, உயிர் இருந்தாலும் உயிர்ப்பற்ற வாழ்க்கை. அது வெறும்

உயிர்ப்பிழைப்பு; வாழ்வு அன்று. அத்தகைய இழிவை ஏற்று வாழ்வதைவிட, அறத்தை விட்டுக் கொடுக்காமல் துன்பத்தை ஏற்கும் நிலைப்பாடே உயர்ந்தது என்கிறார்.

உடல் ஒருநாள் மண்ணோடு கலந்துவிடும். ஆனால் அறத்தோடு வாழ்ந்த வாழ்க்கை காலத்தை வென்று நிற்கும். மனிதன் மறைந்தாலும், அவன் காத்த அறம் அவனை மறையவிடாது. அதுவே "அறங்கூறும் ஆக்கம்."

வரலாற்றில் நிலைத்திருப்பவர்கள் நீண்ட நாள் வாழ்ந்ததால் அல்ல; நேர்மையோடு வாழ்ந்ததாலே நிலைத்திருக்கிறார்கள். அவர்கள் உயிரைவிட உயர்வாகக் கருதியது அறத்தையே. அதனால்தான் அவர்களின் புகழ் தலைமுறைகளைக் கடந்தும் நிலைத்து நிற்கிறது.

அறத்தை இழந்து வாழ்வது வாழ்க்கையல்ல;
அறத்தைக் காத்து வாழ்வதே மனித வாழ்வின் உண்மையான ஆக்கம்.

இந்தக் குறள் நமக்குள் ஒரு ஆழமான வினாவை எழுப்புகிறது:
"உயிரைக் காப்பதே வாழ்க்கையா?

அறத்தைக் காப்பதே வாழ்க்கையா?"
உயிர் ஒருநாள் முடிவுறும்.
அறம் காலங்களைக் கடந்து நிலைத்திருக்கும்.
இதுவே இக்குறளின் நெறியும்; மனித வாழ்வின் நெறியும்!

திருவள்ளுவரின் பதில் தெளிவானது:
உயிர் மனிதனுக்கு இயற்கை வழங்கிய கொடை
அறம் மனிதன் உலகிற்கு வழங்கும் கொடை!

10. ஆடிப்பிறப்பு ஏன் கொண்டாடப்படுகிறது?

— முனைவர் தேமொழி

சூரிய நகர்வின் அடிப்படையில் ஒரு பருவ காலத்தின் தொடக்கத்தைக் கொண்டாடும் முறையில் ஆடி மாதத்தின் தொடக்கத்தைக் கொண்டாடுகிறார்கள். ஜூன் 21 அன்று கோடைக்கால கதிர்த்திருப்ப நாள் (*summer solstice*) நிகழ்கிறது.

ஒவ்வொரு ஆண்டும், சூரியன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் (கடக ரேகையிலிருந்து மகர ரேகை நோக்கி), தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் (மகர ரேகையிலிருந்து கடக ரேகை நோக்கி) நகரும். இவ்வாறு சூரியன் வட தென் திசைகளை நோக்கி மாறி மாறி நகர்வது சூரியனின் தென்திசைச் செலவு என்றும் சூரியனின் வடதிசைச் செலவு என்றும் அழைக்கப்படுகிறது. புவி தன்னைத்தானே சுழலும் அச்சு 23.5° சாய்ந்திருப்பதால், சூரிய நகர்வு பருவ காலங்களை உருவாக்குகிறது (*The*

Seasons, the Equinox, and the Solstices. NOAA. https://www.weather.gov/cle/seasons).

அறிவியல்படி சூரியனின் தென்திசைச் செலவு/தட்சிணாயனம் (ஜூன் 21 — டிசம்பர் 22) ஆகும். இக்காலம் ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என ஆண்டின் ஆறு மாதங்களாகும். ஆக, தென்திசைச் செலவு ஆடித் திங்களில் தொடங்கி மார்கழியில் முடிகிறது.

அதுபோல, சூரியனின் வடதிசை நகர்வு அல்லது குளிர்கால கதிர்த்திருப்பம் நிகழும் நாள் டிசம்பர் 22. சூரியனின் வடதிசைச் செலவு/உத்தராயணம் (டிசம்பர் 22 — ஜூன் 21) ஆகும். இக்காலம் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி என ஆண்டின் ஆறு மாதங்களாகும். வடதிசைச் செலவு தைத்திங்களில் தொடங்கி ஆனியில் முடிகிறது. சூரியனின் வடதிசைச் செலவு தொடக்க நாளில் தமிழகத்தில் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது.

முன்னும் பின்னுமான இந்த இரண்டு சூரிய நகர்வுகளுக்கும் இடையில், இரண்டு இரவு பகல் சம நாட்கள் (Equinox, மார்ச் 21, செப்டம்பர் 22) ஏற்படும். எனவே டிசம்பர் 22, மார்ச் 21, ஜூன் 21,

செப்டம்பர் 22 ஆகிய நாட்கள் ஒவ்வொரு பருவகாலத்தின் தொடக்கங்களாக அமைகின்றன. ஜூன் 21 கோடைக்கால கதிர்த்திருப்ப நாள் என்பது ஆடியின் தொடக்கமாக, ஒருகாலத்தில் கோடைக்கால கதிர்த்திருப்ப நாளாக இருந்ததைப் புரிந்து கொள்ளலாம்.

புவியின் அச்சுத்திசை மாறுமியக்கம் (Precessional Motion) காரணமாகச் சூரிய நகர்வுகளைக் குறிக்கும் நாள் பஞ்சாங்கத்தில் மூன்று வாரங்களுக்கு மேல் தள்ளிப் போய்விட்டது. பஞ்சாங்கம் இதைச் சீர் செய்யவில்லை, இதை 'பஞ்சாங்கப் பிழை' எனக் குறிப்பிடுவார் 'விஞ்ஞான் பிரச்சார்' நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானியும் அறிவியல் எழுத்தாளரும் ஆன த.வி.வெங்கடேஸ்வரன். (பொங்கல் நாள் மாறிய மர்மம், த.வி.வெங்கடேஸ்வரன், அருஞ்சொல், ஜனவரி 21, 2023. https://www.arunchol.com/tv-venkateshwaran-on-pongal-date-changing).

டிசம்பர் 21 ▶ ஜனவரி 14
குளிர்காலக் கதிர் திருப்ப நாள் = தைப்பிறப்பு
வேறுபாடு 24 நாட்கள்

மார்ச் 21 ▶ ஏப்ரல் 14
இரவுபகல் சமநாள் /இளவேனில் தொடக்கம் = சித்திரை பிறப்பு
வேறுபாடு 24 நாட்கள்

ஜூன் 21 ▶ ஜூலை 17 (ஆனியில் இம்முறை 32 நாட்கள்!!!)
கோடைக்காலக் கதிர் திருப்ப நாள் = ஆடிப்பிறப்பு
வேறுபாடு 26 நாட்கள்

செப்டம்பர் 22 ▶ அக்டோபர் 18
இரவுபகல் சமநாள் / இலையுதிர் காலத் தொடக்கம் = ஐப்பசி பிறப்பு
வேறுபாடு 26 நாட்கள்



"ஆட்டைவட்டம் எனப்படும் ஓர் ஆண்டின் சுழற்சியை – 360 பாகைகளை – 90 பாகைகள் கொண்ட நான்கு பிரிவுகளாகப் பிரித்து, சித்திரை விஷு, தக்ஷிண அயனம், ஐப்பசி விஷு, உத்தர அயனம் எனக் குறிப்பிடும் வழக்கம், கி.பி. 998ஆம் ஆண்டைச் சேர்ந்த தஞ்சை மாவட்டம் திருவலஞ்சுழி சேத்ரபால தேவர் கோயிற் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இந்நாள் புத்தாண்டுத் தொடக்கமாகவோ தமிழர்க்கு மட்டுமேயுரிய திருநாளாகவோ கருதப்படவில்லை." (பார்க்க: http://www.sishri.org/puthandu.html, சித்திரையில்தான் புத்தாண்டு, எஸ். ராமச்சந்திரன்)
[சித்திரை விஷு=சித்திரை; தக்ஷிண அயனம்=ஆடி; ஐப்பசி விஷு=ஐப்பசி; உத்தர அயனம்=தை ஆகிய மாதங்களில் தொடங்கும் பருவ காலங்களின் தொடக்கங்கள்]

இதிலிருந்து கோடைக்காலக் கதிர் திருப்ப நாளை பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது. ஆனால் அதைக் கொண்டாடினார்களா என்பது ஆய்வுக்கு உரியது. இருப்பினும், சூரிய நகர்வுகளைக் கொண்டாட விரும்பும் இக்காலத்துத் தமிழர் ஏன்

கொண்டாடுகிறோம் என்ற காரணம் புரியாமல் பிழையான காலக் கணக்கில், ஜூன் இறுதி வாரத்தில் கொண்டாட வேண்டிய நாளை ஜூலையும் தொடங்கி இரண்டு வாரங்களுக்குப் பிறகு கொண்டாடிக் கொண்டிருப்பது காலம் அதன் கோலம்.

11. குறிக்கோள் மோப்பக் குழைந்தது அனிச்சம்

— எ. இரவிச்சந்திரன்

நாட்டிலே தன்துயர் தன்னோடு முடிய
தான்பெற்ற துளிர்கட்கு இனியேனும் விடிய
மூட்டை தூக்கியே வாழ்ந்த சண்முகம்
முனைந்தே தூக்கினான் வாழ்வின் சுமையை
வீட்டிலே பெற்றது ஐந்து செல்வங்கள்
விளைந்தனள் கடைசியாய் ஆருயிர் ஓர்மகள்

கூட்டிலே இருப்பது அனிச்ச மலரெனக்
குறித்திடத்தானோ அனிதா வென்றழைத்தான்

தொட்டாலே தீட்டென்று மனிதரை அஞ்சுவார்
தொட்டிலில் இடம்தந்து நாய்களைக் கொஞ்சுவார்
இட்டது சட்டமாய் இருந்த நாட்களில்
இருண்டது சமூகம் இழந்தனர் வாழ்வே
எட்டாது கல்வியென ஏங்கியே துடித்தோர்க்காய்
எரிமலை ஒன்று ஈரோட்டில் வெடித்தது
கிட்டாத படிப்பினைக் கிட்டத்தில் நகர்த்தினார்
கீழ்வானின் விடிவெள்ளி ஞானத்தின் தந்தை

நோயினால் இழந்த தன்தாயினை எண்ணி
நொடிந்துபோன தன் சமூகத்தை நாணி
தாயுமான அவள் தந்தையை உயர்விக்க
தன்னூர் சமூகத்தை நோயின்றி உய்விக்க
காயும் கதிரும் ஒருநாள் ஓயும்
கைஒடிந்த நிலையிலும் ஓயாது ஓடி
ஆயிரம் கனவுடன் படித்தனள் அனிதா
ஆகிடத் துடித்தாள் மருத்துவப் புனிதா

சட்டென நீட்டினார் நீட்டெனும் தேர்வினை
சமதூரம் ஓடென்றார் காலில்லா முடவரை
ஒட்டிட வேண்டாமோ கல்வியின் ஓட்டையை

ஓர்கல்வி வேண்டாமோ ஒருதேர்வு இங்கெனில்
பட்டெனக் கொணர்வதா அவகாசம் வேண்டாமா
பலஆண்டு முடங்கியோர்க்குச் சிலஆண்டு வேண்டாமா
வெட்டுண்ட ஆடெனத் துடித்தாள் அனிதா
வீணுன்ட மதிப்பெண்கள் லட்சியம் நினைத்தாள்

தொட்டார்ச் சிணுங்கி வாடிடும் மீளும்
தொலைந்த குறிக்கோளால் தொங்கிய மகளோ
பட்டாலே மோப்பம் குழைந்திடும் அனிச்சம்
பாருள்ள நிலைமைக்கு மெழுகான வெளிச்சம்
கெட்டது கல்வியெனத் தொலைதூரம் போனாள்
கேவியழும் தந்தைக்கு பாரமாய் ஆனாள்
நட்டது கெட்டதை நாடாள்வோன் அறிவனோ
நீட்டோலை வாசியான் நெடுமரம் புரிவனோ

(2017 – தமிழ் நதி – குயின்ஸ்லாந்து தமிழ் மன்றம், பிரிஸ்பேன், ஆஸ்திரேலியா)

12. "சும்மா விட்ருமா சாமி"

— குமரன்

வேடிக்கைமனிதர் வாயில்
வாடிக்கை தானே வசைச்சொல்!

கேள்வி ஒன்று மட்டும் தான்
வேடம் அணியாதது தானோ பெருங்குற்றம்?

தேரில் இருக்கும் தெய்வத்தை
தேடி அழைப்பதென்னே வசைபாட ?!

நேர்மையற்ற மனிதர் அழைத்தால்
நேரே வந்திடுமோ தெய்வம்?

கேடுசெய்ய கூட்டணி சேர்ந்திடுமோ?

வாய்மையற்ற வஞ்சகர் சொல்தான்
வாழ்வை வருத்திடுமோ?

நல்லோர் நாளைக் குறைத்திடுமோ?

வீணர் வாய்வந்த வீண்சொல்லே
வீழ்த்தும் வலிமை உனக்கேது!

நல்லோர் நாட்கள் நீண்டிடுமே!
உள்ளத்தில் ஊக்கம் ஊறிடுமே!

13. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்

பனைமரச் சுற்றுலா: சுற்றுச்சூழல், பண்பாடு மற்றும் பொருளாதாரப் பரிமாணங்கள்
— முனைவர் ப்ரீத்தி அரி பாபு
திசைக்கூடல் – 405 [ஜூலை 4, 2026]
https://youtu.be/R3io_OLi5ik

இலங்கை முதல் டென்மார்க் வரை

(புலப்பெயர்வும் அனுபவங்களும்)

— திரு. தர்மகுலசிங்கம் தருமன்

திசைக்கூடல் — 406 [ஜூலை 19, 2026]

https://youtu.be/iiC3qLHOkok

———

உ. சுவலி — ஒலிநூல்கள்

கட்டுரை: நில அபகரிப்பு பண்பாடு
இடம்பெற்ற நூல்: பரண்
நூல் ஆசிரியர்: தொ.பரமசிவன்
வாசிப்பவர்: முனைவர் க.சுபாஷிணி
https://suvali.tamilheritage.org/நில-அபகரிப்பு-பண்பாடு

கட்டுரை: தாலியும் மஞ்சளும்
நூல்: அறியப்படாத தமிழகம்
நூல் ஆசிரியர்: முனைவர் தொ.பரமசிவன்
வாசிப்பவர்: முனைவர் க.சுபாஷிணி
https://suvali.tamilheritage.org/தாலியும்-
மஞ்சளும்/

கட்டுரை: குலதெய்வங்கள்
கட்டுரை ஆசிரியர்: முனைவர் க. சுபாஷிணி
வாசிப்பவர்: முனைவர் க. சுபாஷிணி
https://suvali.tamilheritage.org/குலதெய்வங்கள்/

———

ந. தமிழ் மரபு அறக்கட்டளை காணொளி வெளியீடு

1850களில் மதுரை மாநகரின் படங்கள்
https://www.youtube.com/watch?v=XWy_mGnM50A

from. . .

1850s Madurai — Photographs taken by Captain Linnaeus Tripe. Government Photographer,

Madras Presidency during Colonial Administration.

"Stereographs of Madura" is a historical 1858 photographic publication featuring 70

stereographic albumen prints of Madurai, India, captured by government photographer Captain Linnaeus Tripe with text descriptions by the Rev.W.Tracy

———

ச. தமிழ் மரபு அறக்கட்டளை புத்தக வெளியீடு

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் மேலும் புதிய ஐந்து நூல்கள்... நூல்களை விரும்பி வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த ஐந்து நூல்களும் நிச்சயம் ஆர்வத்தைத் தூண்டும்.

ரு. வாருங்கள் படிப்போம் குழுவுடன் "மலேசியா சிங்கப்பூரில் பெரியார்" புத்தக திறனாய்வு

மலேசியா சிங்கப்பூரில் பெரியார்

— முனைவர் க. சுபாஷிணி

வாருங்கள் படிப்போம் – 359

https://www.youtube.com/watch?v=W-1vXO-E7Ts

கூ. துயரச் செய்தி

பேராசிரியர் ப.பாண்டியராஜா அவர்களது வாழ்க்கைத் துணை வனஜா அம்மையார் அவர்கள் இன்று காலை காலமானார். பேராசிரியரின் அனைத்து பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். இணைந்தே செயலாற்றும் தம்பதியர். பேராசிரியர் அவர்களுக்கு எப்படி ஆறுதல் கூறுவது என்றே தெரியவில்லை.

அவரை இழந்து வாடும் பேராசிரியர் அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாம் சங்கம்பீடியா வலைப்பக்க உருவாக்கம், பாதுகாப்புப் பணிகளைத் தொடங்கிய காலம் முதல் எப்போது பேரா அவர்களைச் சந்தித்து உரையாடுவது என்றாலும் வனஜா அம்மையார் அவர்களும் உடன் வருவார். இணைய நிகழ்ச்சிகளிலும் எப்போதும் இணைந்தே அமர்ந்து காட்சி தருவார்கள். பத்துப் பாட்டில் சொல்லோவியங்கள் நூல் தயாரிப்புப் பணிக்காக நமது பதிப்பகக் குழுவினர் அவரது வீட்டிற்குச் சென்று நீண்ட நேரம் உரையாடிக் கொண்டு பணிகளைச் செய்து கொண்டிருந்த போது காலை உணவு, மதிய உணவு என சளைக்காமல் எங்களை அன்போடு உபசரித்தவர் வனஜா அம்மையார்.

—சுபா
16/7/2026

———

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள்


மக்கள் வரலாறு (3 தொகுதிகள்)


வள்ளுவர் குறள் ஆத்திச்சூடி முறையில்

விண்ணை நோக்கி


தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்

மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1

மட்டக்களப்பு


தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்


கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்

தமிழர் புலப்பெயர்வு

பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்


இலக்கிய மீளாய்வு

இராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி

நிலவியல் நோக்கில் கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு

கணிதவியல் - பொதுக் கட்டுரைகள்


தமிழகத்தில் பௌத்தம்


விளையாடிய தமிழ்ச் சமூகம்


கல்வெட்டில் தேவதாசி

தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்

வரலாற்றில் பொய்கள்

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

தமிழ் வலசை


மணிமேகலையின் பௌத்தப் பேரறம்


செம்மொழியும் மின் தமிழும்


Ancient Tamil Corpus: A Key T Understand The Indus Riddle


சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்

தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்

தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கிய கடல்களும் கடல்கொண்ட நிலங்களும்

வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம் நகரும் நகர்ப்புறமும்

நீலக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்

பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 2)


பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 1)

நக்கீரர் நடைப்பயணம் (நெடுநல்வாடை)

வரலாற்று ஆய்வில் களப்பணிகள்


ராஜராஜனின் கொடை

கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்

கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள

கிழக்கரை வரலாறு

நாகர் நிலச்சுவடுகள்


அறியப்பட வேண்டிய தமிழகம்

திருவள்ளுவர் யார்?

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

1. Der Kural Des Thiruvalluvar
   By Dr.Karl Graul (First edition 1856 reprinted - 2019) Euro.25

2. Thiruvalluvar's Prose
   By August Fridrich Cammerer(First edition 1803 reprinted - 2019) Euro 25

3. **திருவள்ளுவர் யார்?** (2021)
   கௌதம சன்னா ரூ.200

4. **நாகர் நிலச்சுவடுகள் (இலங்கை பயண அனுபவம்)** (2020)
   மலர்விழி பாஸ்கரன் ரூ.100

5. **அறியப்பட வேண்டிய தமிழகம்** (2021)
   தொ. பரமசிவன் நேர்காணலும் கட்டுரைகளும்
   தொகுப்பாசிரியர் - முனைவர்.க.சுபாஷிணி ரூ.80

6. **கீழக்கரை வரலாறு** (2021)
   எஸ்.மஹ்மூது நெய்னா (இப்போது.காம் இணைபதிப்பு) ரூ.300

7. **கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்** (2021)
   துரை சுந்தரம் ரூ.160

8. **கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்** (2021)
   துரை சுந்தரம் *ரூ.140*

9. **தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்**(2021)
   கோ. சசிகலா ரூ.180

10. **வரலாற்றில் பொய்கள்** (2021)
    தேமொழி ரூ.100

11. **விளையாடிய தமிழ்ச்சமூகம்** (2022)
    ஆ. பாப்பா ரூ.300

12. **கல்வெட்டில் தேவதாசி** (2022)
    எஸ் சாந்தினிபி ரூ.150

13. **ராஜராஜனின் கொடை** (2022)
    க. சுபாஷிணி ரூ.180

14. **இலக்கிய மீளாய்வு** (2023)
    தேமொழி ரூ.150

15. **கணிதவியல்** (2023)
    ப. பாண்டியராஜா ரூ.180

16. **ராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி** (2023)
    ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.90

17. **வரலாற்று ஆய்வில் களப்பணிகள்** (2023)
    க. சுபாஷிணி ரூ.120

18. **தமிழகத்தில் பௌத்தம்** (2023)
    தேமொழி ரூ.120

19. **நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு** (2023)
ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.300

20. **நீலக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்** (2023)
நரசய்யா ரூ.150

21. **பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்** (2023)
அ. கா. ஈஸ்வரன் ரூ.180

22. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி** 1 (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

23. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி** 2 (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

24. **நக்கீரர் நடைப்பயணம்** (2024)
ப. பாண்டியராஜா ரூ.180

25. **தமிழர் புலப்பெயர்வு உலகளாவிய பயணங்கள்-குடியேற்றங்கள்-வரலாறு** (2024)
க. சுபாஷிணி ரூ.500

26. **கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்** (2024)
நா. கண்ணன் ரூ.220

27. **வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம்-நகரும் நகர்ப்புறமும்** (2024)
ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.320

28. **தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கியகடல்களும் கடல்கொண்டநிலங்களும்** (2024)
ச. சிங்காநெஞ்சன் ரூ.140

29. **தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்** (2024)
ச. சிங்காநெஞ்சன் ரூ.120

30. **சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்** (2024)
தமிழ் மரபு அறக்கட்டளை ரூ.120

31. **மக்கள் வரலாறு: தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1** (2024)
க. சுபாஷிணி ரூ.200

32. **தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்** (2024)
க. சுபாஷிணி ரூ.180

33. **மட்டக்களப்பு: வரலாறு, சமூகம், பண்பாடு** (2024)
ஆ.பாப்பா, மு.இறைவாணி ரூ.280

34. **தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்** (2024)
தேமொழி ரூ.250

35. **தூரக் கிழக்கில் தமிழ் ஆய்வுகள்: கொரியா** (2025)
நா. கண்ணன், க. சுபாஷிணி, சூ. ஆம்ஸ்ட்ராங் ரூ.250

36. **விண்ணை நோக்கி இலக்கியத்தில் அறிவியல் செய்திகள்** (2025)
தேமொழி ரூ.180

37. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 2** (2025)
க. சுபாஷிணி ரூ.250

38. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 3** (2025)
க. சுபாஷிணி ரூ.250

39. **தமிழ் வலசை** (2025)
சிவ இளங்கோ ரூ.150

40. **மின்தமிழும் செம்மொழியும்** (2025)
நா. கண்ணன் ரூ.*220*

41. **வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்** (2025)
தேமொழி ரூ.50

42. **Ancient Tamil Corpus:A key to understand the Indus Riddle** (2025)
Tamil Heritage Foundation ரூ.120

43. **மணிமேகலையின் பௌத்தப் பேரறம்** (2025)
அரங்கமல்லிகா ரூ.300

44. **Life and Achievements of Chola Emperor Rajaraja I Redefined** (2025)
Sundhar Bharadhwaj ரூ.450

தமிழ் மரபு அறக்கட்டளையின் பதிப்பக நூல்களை சென்னையில். **டிஸ்கவரி புக் பேலஸ்; ஆழி பதிப்பகம்; எமரால்ட் பதிப்பகம்** ஆகிய இடங்களில் நேரில் வாங்கலாம்.
நூல்களை **இணையம் வழியாக** கீழ்க்காணும் தளங்களில் பெறலாம்:

1. https://www.commonfolks.in/books/tamil-heritage-foundation
2. https://wisdomkart.in/books-publication/tamil-heritage-foundation/

தமிழ் மரபு அறக்கட்டளை

Tamil Heritage Foundation

THF

தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள்,
ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி
தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

தமிழ் மரபு அறக்கட்டளை பதிப்பகம் வெளியிடும்

5 நூல்கள்



வெளியீட்டு நாள் :

22.8.2026

இடம் :

சென்னை தமிழ் இணையக் கல்விக்கழக அரங்கம்